Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-smskr @ evreka.lk
(சி.1136)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 24 (25.07.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 296

## தமிழ் அரசை உருவாக்க வெளிநாட்டுப் படைகளா?

### ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் அரசாங்கம் ஒன்றை உருவாக்கும் நோக்கில், வெளிநாட்டு அமைதிப்படையை கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக- ஜே.வி.பி. அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கையில் வெளிநாட்டு அமைதிப்படை ஒன்றை கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் இலங்கையிலே தமிழ் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதை (10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகத்துக்கு உதவ சந்திரிகாவிடம் ரணில் கோரிக்கை!

(கொழும்பு)


வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைக்கும் முயற்சிக்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒத்துழைக்க வேண்டும் என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதம் ஒன்றை, இரகசியமான முறையில் இவ்வாரத் தொடக்கத்தில் அனுப்பி வைத்துள்ளார்.

இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பாக நீண்ட விவாதங்கள் நடத்தப்பட்டு, ஆராய வேண்டிய தேவை இருப்பதாக பிரதமர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகப் பேச்சுக்கள் புலிகளுடன் மிக விரைவில் ஆரம்பம்!

## கொழும்பில் அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பாக, சாதகமான பதில் ஒன்று கிடைக்கும் என்று, அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் -**

**இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்ப்பதாகவும் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்ததாவது,

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, அரசாங்கம் அனுப்பிவைத்த திட்ட யோசனைக்கு விடுதலைப் புலிகள் சாதகமான பதிலை வழங்குவார்கள் என அரசாங்கம் எதிர்பார்த்திருக்கிறது. இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பாக, நோர்வே சில விளக்கங்களைக் கேட்டது. அதன் பின்னர்- சில திருத்தங்களும் செய்யப்பட்டன. நோர்வே அரசாங்கமே இந்தத் திருத்தங்களைச் செய்தது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குரங்குப்பாஞ்சானில் முகாமை அகற்ற மறுக்கிறார்கள் புலிகள்!

### கண்காணிப்புக் குழு கூறுகிறது

திருமலை - கிண்ணியாவில் விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட முகாமை அகற்றுமாறு, கண்காணிப்புக் குழுவினர் விடுத்த கோரிகையை, விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர் என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர் டோட்ரயர் தெரிவித்தார்.

இந்த முகாம் அமைக்கப்பட்டது தொடர்பாக - அண்மையில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தியிருந்தார்.

இதன்போது, கிளிநொச்சியிலிருந்து விடுதலைப் புலிகளின் குழுவொன்று கிண்ணியா சென்று, முகாம் தொடர்பாக ஆராய்ந்து - அதன் பின்னர், விடுதலைப் புலிகளின் உயர் மட்டம் இது குறித்த முடிவை (10 ஆம் பக்கம் பார்க்க)

## இத்தாலிக்குச் செல்ல முயன்ற மேலும் 163 வெளிநாட்டவர் கைது!

### கல்கிசை சுற்றிவளைப்பில் சிக்கினர்

சட்டவிரோதமான முறையில் இலங்கை ஊடாக இத்தாலிக்குச் செல்லவிருந்த 163 வெளிநாட்டவர்கள், நேற்று அதிகாலை கல்கிசையிலுள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் விமானம் மற்றும் கப்பல் மூலமாக, இலங்கைக்கு வந்துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோரின் விஸாக்கள் காலாவதியாகியுள்ளதாகவும், இன்னும் சிலரிடம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயங்களால் யாழ்.வளங்கள் பாழாகின!

### பிரட்மன் வீரக்கோன் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள- அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மீன்பிடிப்பதற்கான கடற்பிரதேசமும், விவசாயப் பிரதேசமும் உள்ளன. ஆனால், அந்த வளங்களை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது என்று, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

நிரந்தர சமாதான சூழ்நிலை ஏற்படுமானால், அவற்றை உரிய முறையில் பயன்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அகதிகள் விவகார அமைச்சினால், 'யாழ்ப்பாண அபிவிருத்தித் திட்டம்' என்ற நூல் கல்தாரி ஹோட்டேலில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய, பிரட்மன் வீரக்கோன் மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணம் கல்விப் பாரம்பரியத்தினாலும் பொருளாதார வளங்களினாலும் சிறந்து விளங்கியது. ஆனால், இன்று அந்த நிலை இல்லை. மீன்பிடிப்பதற்கான கடற்பிரதேசங்களும் விவசாய நிலங்களும் உயர்பாதுகாப்புப் பிரதேசத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பினர் வன்னி செல்கின்றனர்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்காக, எதிர்வரும் திங்கட்கிழமை கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளனர்.

கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறை நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், கலந்துகொள்ளுமாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (200)

## இந்தியாவின் ஆதரவின்றி தீர்வினை எட்ட முடியாதாம்!

### ஈ.என்.டி.எல்.எவ். கூறுகிறது

ஐக்கிய தேசிய முன்னணி அரசும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து- சமஷ்டித் தீர்வு ஒன்றை இந்தியாவின் ஆதரவுடன் முன்வைப்பதே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்கும் என, ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் வி.ராம்ராஜ் தெரிவித்தார்.

இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் அரசு கொண்டு வரும் எந்தத் தீர்வையும் எதிர்க்கட்சி எதிர்ப்பதால், தமிழர் பிரச்சி (10 ஆம் பக்கம் பார்க்க)

இணையத்தளத்தில்...
நமது ஈழநாடு
www.eezhanadu.com

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -1139)

# கிழக்கு தமிழர்களின் தாயகமல்ல; வடக்கிலிருந்து பிரிக்கவேண்டும்!

## நாடாளுமன்றில் அதாவுல்லா உரை

கிழக்கு மாகாணம் தமிழ் மக்களின் தாயகம் அல்ல. இங்கு மூவினத்தவர்களும் வாழ்கிறார்கள். இதனால் - இடைக்கால நிர்வாக சபையினை வழங்கும்போது வடக்கிலும், கிழக்கிலும் தனித்தனியான நிர்வாகங்கள் ஏற்படுத்தவேண்டும் என்று, அமைச்சர் அதாவுல்லா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில் - தமிழ்மக்களின் போராட்டம் நியாயமானதென்றால், முஸ்லிம்களின் போராட்டமும் நியாயமானதுதான். வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டனர். கிழக்கையும் தாரைவார்க்க முடியாது.

முட்டாள்தனமாக 1987 இல் இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கைப் பிரிக்கவேண்டும். இதன் மூலமே, தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழமுடியும் எனத் தெரிவித்தார்.

# மாகாண கைத்தொழில் கண்காட்சி யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில்!

வடக்கு - கிழக்கு மாகாண கைத்தொழிற் திணைக்களத்தினால் வருடாவருடம் நடாத்தப்படுகின்ற, மாகாண மட்டத்திலான கைத்தொழிற் கண்காட்சி - யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

செப்டம்பர் மாதம் 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் - தொடர்ந்து மூன்று நாட்கள் இந்தக் கண்காட்சி நடைபெறும்.

சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்குமுகமாக நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் பங்கு கொண்டு, தமது உற்பத்திப் பொருட்களையும், கண்காட்சிப்படுத்த விரும்பும் தொழில் முயற்சியாளர்கள், யாழ். கச்சேரியில் இயங்கும் தொழிற்துறைத் திணைக்களத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, பூரணப்படுத்தி- அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# சமாதான விளையாட்டு விழா ஏற்பாட்டுக்கு அமைச்சர் வருகிறார்

சமாதான விளையாட்டு விழா தொடர்பாக ஆராய்வதற்கு - காணியமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அதிகாரிகள் கொண்ட குழு, அடுத்த மாதம் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது.

யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் - இது தொடர்பான கலந்துரையாடலொன்றில் இவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இக்கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், விளையாட்டு அதிகாரிகள் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இவ்விளையாட்டு விழா, ஒக்ரோபர் 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறும்.

# ஆசிரியர் சேவைப் பிரிவு கல்வி அமைச்சில் நிறுவுக!

## ஆசிரியர் சங்கத் தலைவர் கோரிக்கை

ஆசிரியர் சேவைப்பிரிவு ஒன்றை- கல்வி அமைச்சில் உடனடியாக நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு, ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெயதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை கல்வி அமைச்சில் நடைபெறவுள்ள கூட்டத்தில் - இவ்விடயம் தொடர்பாகவும், பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால், நாளை நடைபெறவுள்ள மத்திய குழுக்கூட்டத்தில் வடமாகாணப் பிரதிநிதிகள் சமூகமளித்து தமது பிரச்சினைகளைச் சமர்ப்பிக்குமாறும், இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

# கூட்டுறவு தின பேச்சுப் போட்டி; பரிசு பெற்ற மாணவர் விபரம்!

## இன்று பரிசளிப்பு விழா

(நவக்கிரி)

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - 81 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவையொட்டி, யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்திய பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் - இ.துசாந்தன் (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - ந.கஜலக்சுமி (அச்சுவேலி மத்திய கல்லூரி), மூன்றாம் இடம் - ச.கயானா (அச்சுவேலி மத்திய கல்லூரி)

**மத்திய பிரிவு**

முதலாம் இடம் - இ.சஸ்மிதா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), இரண்டாம் இடம் - பா.றஜிதா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - அ.திருமகள் (அச்சுவேலி மத்திய கல்லூரி).

**மேற்பிரிவு**

முதலாம் இடம் - சி.கரிகரன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), இரண்டாம் இடம் - க.கலையரசி (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - து. ஐசோனியா (அச்சுவேலி தெரேசாள் மகளிர் கல்லூரி).

**உயர் மேற்பிரிவு**

முதலாம் இடம் - ஜெ.ஜெயப்பிரபா (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), இரண்டாம் இடம் - சி.சிவலோஜினி (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - சு.பிரசாந்தினி (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி).

இவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் இன்று மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெறும். இன்றைய கூட்டுறவு தின விழாவின்போது, கூட்டுறவு உதவி ஆணையாளரினால் பரிசில்கள் வழங்கப்படும். (128)

# மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டு. இடம்பெயர் சேவை ரத்து!

## ஹர்த்தாலினால் அதிகாரிகள் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்சேவையை மேற்கொள்வதற்காக - மட்டக்களப்புக்குச் சென்ற மனித உரிமை ஆணைக்குழுவின், இடம்பெயர்ந்தோருக்கான செயற்திட்ட அதிகாரிகள் குழு, அங்கு அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலினால் தமது சேவையை வழங்க முடியாது திரும்பியுள்ளது.

வட- கிழக்கில் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் உண்மை நிலையை அறிவதற்காக, மனித உரிமை ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோர் செயற்திட்ட அதிகாரிகள் ஆறு பேர், மூன்று நாட்கள் இடம்பெயர்சேவையை நடத்துவதற்காக, கடந்த 20 ஆம் திகதி மட்டக்களப்புக்குச் சென்றனர்.

எனினும், அங்கு அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலினால் தமது சேவையைப் பூரணமாக செய்யமுடியாத நிலையில் திரும்பியுள்ளனர். எனினும், இவர்கள் அடுத்தமாதமளவில் தமது மட்டக்களப்பிற்கான விஜயத்தை மேற்கொள்ளுவர் எனத் தெரியவருகின்றது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

(உடுவில்)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவுடன் நடத்தப்படும்- பாலர் பாடசாலைகளின் விளையாட்டு விழா, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு - நிக்கொட் உதவித்திட்டப் பணிப்பாளரும், காரைநகர் பிரதேச செயலருமான வே. சாம்பசிவம் - பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட இணைப்பாளர் சு.ஜெயராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (101)

## வாக்காளர் இடாப்பு திருத்தம்

(சுதுமலை)

2003 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புத் திருத்தம், ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் இடம்பெற்றுவருகின்றது.

இதற்கான விண்ணப்பப்படிவத்தை கிராமசேவையாளரிடம் பெற்றுப் பூரணப்படுத்தி, அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கும்படி, சுதுமலை வடக்கு கிராமசேவையாளர் கேட்டுள்ளார்.

## முகாமைத்துவப் போட்டியில் முதலிடம்

(உடுவில்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, வட- கிழக்கு மாகாண அமைச்சினால் பிரதேச சபைகளுக்கு இடையே நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டிகளில், வலி.வடக்குப் பிரதேசசபை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்போட்டிகளுக்கான வெற்றிச் சான்றிதழ்களை - அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற உள்ளூராட்சி வாரவிழாச் சிறப்பு நிகழ்வில் கலந்துகொண்ட - வலி. வடக்குப் பிரதேச செயலர் பொ.வைரமுத்து பெற்றுக்கொண்டார். (101)

## வலுவூட்டல் ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு, பிரதேச செயலக பிரிவிற்கான வலுவூட்டற் பயிற்சி நிலையம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர், விளையாட்டு உத்தியோகத்தரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## திங்களன்று கடைகளை மூட வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசைத் தினத்தை முன்னிட்டு - சகல வர்த்தக நிலையங்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை பூட்டி, வர்த்தக ஊழியர்கள் தமது ஆடி அமாவாசைக் கடமைகளைச் செய்வதற்காக - விடுமுறை வழங்க வேண்டுமென, யாழ்.வணிகர் கழகம் தமது செய்திக் குறிப்பில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## குளவிகளால் தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை வடக்கு ஊர்காவற்துறையைச் சேர்ந்த, செபஸ்தி - ஜோர்ஜ் என்பவர் குளவி கொட்டியதால் பாதிக்கப்பட்ட நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வீட்டு வளவைத் துப்பரவு செய்துகொண்டிருந்த இவரை, நூற்றுக்கும் அதிகமான குளவிகள் தாக்கியதாகத் தெரியவருகிறது. இவர், உடனடியாக அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். (121)

## கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் கூட்டம்

நீர்வேலி, கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் மாதாந்தக் கூட்டம் - நாளைமறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில், நீர்வேலி கந்தசாமி கோவில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் - அனைத்துச் சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அரச அதிகாரிகளுக்கு கருத்தரங்கு

வட-கிழக்கில், புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக அரச அதிகாரிகளுக்கான கருத்தரங்கு, யாழ். அரச செயலகத்தில் நடைபெற்று வருகின்றது.

இக்கருத்தரங்கில் - யாழ். செயலக அதிகாரிகள், குடாநாட்டிலுள்ள அனைத்துப் பிரதேச செயலக அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொள்கின்றனர். இக்கருத்தரங்கில் அரச அதிகாரிகளுக்கு திட்டமிடல் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல் போன்றன பற்றி விளக்கமளிக்கப்படுகிறது.

## தாச்சிப் போட்டிகள்

வலி.தெற்குப் பிரதேசசபையினர்- உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டிகள், நாளை மு.ப. 9 மணிக்கு இணுவில் அண்ணா சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்மாவட்ட தாச்சிச் சங்க விளையாட்டு விதிகளுக்கு அமைவாக நடைபெறும் இப்போட்டியில் - ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின், போட்டி முடிந்து 6 மணித்தியாலங்களுக்குள் அறியத்தரல் வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. (101)


நிறஞ்சனாஸ் சங்கானை

கரன், குஷ்பு நடித்த

ஸ்ரீ பண்ணாரி அம்மன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

பாடசாலை மாணவர்களும் பெரியவர்களும் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்.

THE MUMMY

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



ப்ரியமான தோழி

10.30, 2.30, 6.30.9.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

இயக்கம்: விக்ரமன்

(சி-1137)


# முக்கிய அறிவித்தல்

**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்**

## கிளைப் பொதுச்சபைக் கூட்டம்

வரைவுள்ள யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம், எதிர்வரும் 27.07.2003 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, முற்பகல் 10.00 மணிக்கு கீழ்வரும் அட்டவணையிலுள்ள விவரப்படி நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

| கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|
| 1. நல்லூர் | யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். |
| 2. யாழ்ப்பாணம் | கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், இல. 12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| 3. வலி. கிழக்கு (கோப்பாய்)<br>வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி)<br>வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) | கந்தசாமி கோவிலடி சனசமூக நிலையம்-மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். |
| 4. வலிகாமம் தெற்கு (உடுவில்) | யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் சாவகச்சேரி வீதி, மருதனார்மடம் சுன்னாகம். |
| 5. வலிகாமம் மேற்கு (சங்கானை) | யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சித்தங்கேணி கிளைக் கட்டடம், சித்தங்கேணி. |
| 6. வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) | பண்டதரிப்பு பரிஸ் ப.நோ.கூ. சங்கம் பண்டதரிப்பு. |
| 7. வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை) | மகாஜன சபை மண்டபம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி. |
| 8. தென்மராட்சி (சாவகச்சேரி) | சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் கண்டிவீதி, சாவகச்சேரி. |

*குறிப்பு:-*

வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி), வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) ஆகிய இரண்டு கிளைகளிலும் அங்கத்தவர்கள் குறைவாக இருப்பதால் - உபவிதிக்கு அமைவாகவும் நெறியாளர் குழுத் தீர்மானத்திற்கு அமைவாகவும் வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேசக்கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தங்களது சங்கத்தின் நிர்வாகத்தில் ஒவ்வொரு உறுப்பினர்களும் பங்குபற்றும்முகமாக இக்கிளைக்குழுத் தெரிவில் பங்குபற்றி தங்கள் கிளைக் குழுவைத் தெரிவுசெய்து, தங்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**செயலாளர்,**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.**

(சி-1262)

# ஈராக்கில் இலங்கை ராணுவத்தினர்; அமெரிக்காவுடன் மிலிந்த ஆராய்வு!

## அமைதிப்படையாக ஈடுபடுத்தி சர்வதேச அனுபவம் பெறத்திட்டம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தை, ஈராக்கில் தரித்துள்ள அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளுடன் இணைந்து அமைதிப்படையாகப் பணியில் ஈடுபடுத்துவது தொடர்பாக - அமைச்சர் மிலிந்த மொறகொட - அமெரிக்க உயரதிகாரிகளுடன் கலந்துரையாடி வருவதாகத் தெரியவருகிறது.

யாழ்.குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறைக்கப்பட்டால் - இப்பிரதேசங்களில் இராணுவத்தினரின் தொகையடர்த்தி அதிகரிக்கப்பட்டுவிடும். இதற்கு ஒரு மாற்றுவழியாகவே, உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் இருந்து விலகக் கூடிய இராணுவத்தினரை - ஈராக்கில் அமைதிப்படையில் இணைத்துக் கொள்ள யோசனை செய்யப்படுவதாக, அரசதரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கைப் பொலிஸார் ஏற்கனவே கிழக்குத் திமோரிலுள்ள அமைதிப்படையுடன் செயற்பட்டுவருகின்ற அதேநேரம் - ஈராக்கில் அமைதிப்படையுடனும் இணைந்து செயற்பட்டால், படையினர் சர்வதேச தரத்தில் பயிற்சிகளைப் பெறக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக, அரச தரப்பில் சிந்திக்கப்படுவதாகவும் மேலும் தெரியவருகின்றது.

இவ்வாறிருக்க - ஈராக்கில் அமைதிப்படையாகப் பணியாற்றுவதற்கு - அமெரிக்கா அழைப்புவிடுத்தபோதும் - அதனை இந்தியாவும், பாகிஸ்தானும் நிராகரித்துவிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(01,200)

## படையினர் தாக்குதலில் இரு பொதுமக்கள் காயம்!

வாழைச்சேனையில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர். கடந்த திங்கட்கிழமை இரவு வாழைச்சேனைச் சந்திக்கு அண்மித்த பகுதியில் வைத்து இத்தாக்குதல் இடம்பெற்றது.

பொதுமக்களில் சிலர், இப்பகுதிகளில் வீதியில் ரயர்களைப் போட்டு எரித்துக்கொண்டிருந்தபோது, அவ்விடத்திற்கு வந்த இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டனர். தாக்குதலின்போது காயமுற்ற இருவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இத்தாக்குதல் பற்றி, வாழைச்சேனை பொலிஸாரிடம் வினாவியபோது, இராணுவத்தினரால் சிலர் தாக்கப்பட்டனர் என்று, தமக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் முறைப்பாடு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

## யாழில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளது; மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் புகார்!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் அதிகரித்த மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக - அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், யாழ்.வந்த மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் என். செல்வக்குமரனிடம் எடுத்துக்கூறியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில்- மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக வருகைதந்த ஆணையாளரை, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் - யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர்.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளமையும், சட்டம்- ஒழுங்குகள் சீர்குலைந்து போயிருப்பதும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டப்பட்டதுடன்,

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட மனித உரிமை ஆலோசனைக்குழுவின் செயற்பாடு பற்றியும், அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் நியமனம் பெற்றவர்கள் யாழ். குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், அதியுயர் பாதுகாப்பு வலயத்தினால் யாழ். குடாநாட்டில் ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்து - அகதி முகாம்களிலும், ஏனைய இடங்களிலும் வாழும் அவலநிலை தொடர்ந்துகொண்டிருப்பதாகவும், மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் எடுத்துக்கூறினர்.

மேலும்- 1996, 1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் காணாமற்போனோர் தொடர்பாக - மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பூரணமானதாக அமையவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இச்சந்திப்பில் உரையாற்றிய மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் என்.செல்வக்குமரன்,

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படுமெனக் கூறமுடியாது. நாங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான ஆலோசனைகளை, அரசாங்கத்திற்குக் கூறலாமே தவிர, அவற்றைத் தீர்மானிக்கும் பொறுப்பு எங்களிடம் இல்லை. அத்துடன், உயர்பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக- நாம் பல அதிகாரிகளுடனும் கலந்துரையாடி வருகிறோம். மிக விரைவில் இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் என, எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் பரமநாதன், யாழ்.மாநகர முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், அருட்தந்தை பேணாட், 'ஊற்று' நிறுவன இயக்குநர் விக்னேஸ்வரன், மகளிர் அபிவிருத்தி இயக்குநர் சறோஜா சிவச்சந்திரன், யாழ். மாவட்ட காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் சற்குணம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ருவான் சந்திரசேகர உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.(ரா)

## ஐரோப்பாவாழ் தமிழ் இளைஞர்களுக்கு கிளிநொச்சியில் கருத்தமர்வு!





நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பமாகிய 'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற தலைப்பிலான-ஐரோப்பா வாழ் தமிழ் இளைஞர்களுக்கான கருத்தமர்வில் பங்கேற்று வருவோரைப் படத்தில் காணலாம்.

'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற தலைப்பில் ஐரோப்பா வாழ் தமிழ் இளைஞர்களுக்கான கருத்தமர்வு, நேற்று முன்தினம் கிளிநொச்சியில ஆரம்பமாகியது.

முதல் நிகழ்வாக - தமிழீழத் தேசியக் கொடியினை அரசியற்துறையைச சேர்ந்த ரவி ஏற்றிவைத்தார். இக்கருத்தமர்வு - விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு, சர்வதேச மாணவர் பேரவை ஆகியவற்றின் ஆதரவுடன் பேராசிரியர் சிறீஸ்கந்தராசா தலைமையில் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

## உடன்படிக்கையை புலிகள் மதித்து நடக்கவேண்டுமாம்!

### பாதுகாப்பு அமைச்சின் செயலர்



போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கையைக் கௌரவித்து நடப்பது என, ஜப்பானின் ஹக்கோன் நகரில் நடைபெற்ற சமாதானப் பேச்சுகளில், அரசும் - விடுதலைப் புலிகளும் இணங்கிக்கொண்டனர். இந்த உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் கௌரவித்து நடக்கவேண்டும் என, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ கேட்டுள்ளார்.

திருமலை - குரங்குபாஞ்சான் பகுதியில் அமைக்கப்பட்ட தமது முகாமை, அங்கிருந்து அகற்ற புலிகள் மறுத்துள்ளது தொடர்பாக, கருத்துத் தெரிவித்த அவர், ஒப்பந்தங்கள் விரும்பியோ, விரும்பாமலோ மதிக்கப்பட வேண்டியவை என்றார்.

கண்காணிப்புக்குழு இது தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்களைப் புறக்கணிப்பது ஆபத்தானது. இந்த விவகாரத்தை தெற்கிலுள்ள ஊடகங்கள் பெரிதுபடுத்தி, கண்காணிப்புக்குழுவின் நிலையைப் பலவீனப்படுத்திவிடும் ஆபத்துண்டு எனவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## அங்குமிங்குமாக அல்லாடுகிறது கணிதவள நிலையம்

யாழ்ப்பாண வலய கணிதவள விஞ்ஞான நிலையம் நிரந்தர கட்டடவசதிகள் இன்றி பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ். முத்துத்தம்பி வித்தியாலயத்திலும், சன்மார்க்க வித்தியாலயத்திலும் மாறிமாறி இயங்கிய மேற்படி நிறுவனம், தற்போது கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

## ஜெயலத்துக்கு எதிரான போராட்டம்; தனிப்பட்ட ரீதியான வெறுப்புணர்வே!

### அமைச்சர் மகேஸ்வரன் நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனவுக்கு எதிராக, யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் - அரசாங்கத்துக்கு எதிரான ஒன்றல்ல. தனிப்பட்ட ஒரு அமைச்சருக்கு எதிரானது என்று, இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றில் அமைச்சர் மகேஸ்வரன் உரைநிகழ்த்தியபோது- எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்தகால நடவடிக்கைகள் மற்றும் தனிப்பட்ட ஒருவரின் ஊழல் நடவடிக்கைகளாலேயே; இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது அரசுக்கு எதிரானதல்ல.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்க்கட்சியினர் யாழ்ப்பாணம் வந்தபோது, யாழ்.மக்கள் அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தனிப்பட்ட ஒருவரின் ஊழல் நடவடிக்கைகளே இந்த எதிர்ப்புக்குக் காரணமாகும், என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## புகையிரத திணைக்களம் அதிகாரசபையாக மாற்றம்!

### மாரப்பன மீது தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

(கொழும்பு)

புகையிரதத் திணைக்களம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியிலிருந்து அதிகாரசபையாக மாற்றப்பட்டிருக்கின்றது.

இதனை எதிர்த்து - இரத்மலானையிலுள்ள புகையிரத இயந்திரவியலாளர் சங்கத்தினருடன் இணைந்து, 22 தொழிற்சங்கங்கள் நேற்றுக் காலை முதல் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

புகையிரதத் திணைக்களம் - அதிகாரசபையாக மாற்றப்பட்ட நடவடிக்கையை உடனடியாகவே இரத்துச் செய்யும்படி, நாட்டிலுள்ள 52 தொழிற்சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாகப் போராட்டத்தில ஈடுபட்டுள்ள சங்கத்தினர் கருத்துத் தெரிவிக்கையில் -

புகையிரதத் திணைக்களம் - அதிகாரசபையாக மாற்றப்பட்ட நடவடிக்கை, தனியார்மயப்படுத்தப்படுதலுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கையே. இதனால், தொழிலாளர்கள் பலரும் பாதிக்கப்படுவதுடன், பணியாளர்களின் நலன்கள் பேணப்படாத அபாயமும் எழும், எனத் தெரிவித்துள்ளனர்.

1993 ஆம் ஆண்டு - நாடாளுமன்றத்தில் அதிகாரசபைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்குப் பின்னர் போக்குவரத்து அமைச்சர்களாக இருந்த - விஜயபால மெண்டிஸ், காமினி அத்துக்கோறள, தினேஷ் குணவர்த்தன, ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் புகையிரதத் திணைக்களம் - அதிகாரசபையாக மாற்றப்பட்டால், ஊழல்கள் இடம்பெறுவதுடன், பணியாளர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதைக் கவனத்திற்கொண்டு, அதனை ஆதரித்துக் கையெழுத்து இடவில்லை.

ஆனால், தற்போது போக்குவரத்துக்குப் பொறுப்பாக இருக்கும் திலக் மாரப்பன - நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கும் தெரியாத நிலையில், புகையிரதத் திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கி, கையெழுததிட்டுள்ளதாகத் தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

(க)

## இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

இராணுவத்துக்கு ஐயாயிரம் பேரை விரைவில் ஆட்சேர்ப்புச் செய்யவுள்ளதாக, இராணுவத்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லொஹான குணவர்த்தன தெரிவித்தார்.

இராணுவத்தில் தற்போது பதினேழாயிரம் வெற்றிடங்கள் இருப்பதாகவும், மிகவிரைவில் இந்த வெற்றிடங்களும் நிரப்பப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு செய்ய அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலவும் தோல்வியில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்ம ராசிக்கு கடந்த 23 ஆம் திகதி 6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி எதிர்வரும் 30 ஆம் திகதி பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்கிறார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பர். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**



## இடபம்

(கார்த்திகை, 2, 3, 4 ரோகிணி, மிருகசிரிடம், 1,2 ஆம் பாதம்)



நீங்கள் கடின உழைப்பிற்குப் பெயர் பெற்றவர்கள். வாழ்வில் மகிழ்ச்சி சிறந்து விளங்கும். மேன்மையான குணமுள்ள நீங்கள் உயர்வு பெறுவீர்கள். சனிப் பெயர்ச்சியால் கலங்கிப் போயிருக்கும் உங்களைக் குருபகவான் பாதுகாப்பார்.

ஆனாலும், விஷ சம்பந்தம் உடைய தோல் நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. தகுந்த தோல் மருத்துவரைக் கண்டு, தக்க மருத்துவம் பெற்றுக்கொள்ளுங்கள். சகோதரர் வழியான செலவினங்கள் கட்டுக்கடங்காமல் இருக்கும். எழுத்தாற்றல் பெருகும். அனைவரும் வியக்கும் வண்ணம் எழுதிப் புகழ்பெறுவீர்கள். சுவையோடு பேசுபவராகவும் விளங்குவீர்கள். நீங்கள் சிறந்த காரியவாதி.

சிலர் பெரிய குடும்பத்தைக் காப்பாற்றுவீர்கள். சங்கீதம், நுண்கலைகளில் ஈடுபாடு அதிகம் இருக்கும்.

தற்சமயம் இந்த ராசியில் பிறக்கும் குழந்தைகள் சிலருக்குக் கண்கள் பூனைக்கண்களாக விளங்கும் வாய்ப்புண்டு. சிலருக்கு மனைவியுடன் வாய்ச்சண்டை ஏற்படும். சுகபோகங்களை அனுபவிக்கத் தடை ஏற்படும். ஆடி மாதம் 31 ஆம் திகதிவரை இத்தடைகள் இருந்து கொண்டிருக்கும்.

ஆவணி முதல் நாளிலிருந்து விடுதலை பெறுகின்றீர்கள். வீண் விரயங்கள் அழிக்கப்படும். இதுவே உங்களுக்குப் பெரிய இலாபம். தகாத உணவில் விருப்பம் அதிகம் ஏற்படும். வேண்டாம் அவ்வகை உணவுகள்.

உங்களுக்கு வாங்கி விற்கும் தொழில்கள் செய்தால், நல்ல இலாபம் கிடைக்கும்.

கண்களில் நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மற்றபடி உங்கள் உடல் ஆரோக்கியம் விருத்தி அடையும். தொழிற்கல்வி கற்க வாய்ப்புக்கள், இந்த ராசி மாணவர்களுக்குக் கிடைக்கும். நுண்கலைகளைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம் அதிகரிக்கும். கணித, கணினித் துறைகளில் சிறப்புக் கிடைக்கும்.

சிலருக்கு இனிப்பு உணவு விரும்பி உண்ணும் வாய்ப்பு ஏற்படும். ஆடி, ஆவணி மாதங்களில் நீங்கள் மிகத் தந்திரசாலியாக இருப்பீர்கள்.

மருத்துவத்துறைத் தொழில்கள் தொடங்க, அதிக செலவுகள் செய்ய வேண்டியிருக்கும். தொழிற்துறைச் செலவுகள் ஆட்டிப்படைக்கும். அலைச்சல் மிக அதிகமாக இருக்கும். சிலருக்கு அந்தஸ்தும், அழகும் மிக்க மனைவி அமைவார். சிலருக்குப் பெரியபெரிய வீடுகள் கட்டும் வாய்ப்புக் கிட்டும். விவசாயிகளுக்கு அதிகமேன்மை உண்டாகும். மக்களால் பெரும் நன்மைகளைச் சிலர் பெறுவார்கள். அரசு அதிகாரிகளுக்குத் தொலைதூரத்திற்கு இடமாற்றத்துடன், பதவி உயர்வு கிடைக்கும். தங்கம், வெள்ளி வணிகத்தில் நல்ல இலாபம் உண்டு.

சிலர் புதிய சொத்து, நிலபுலன்கள் வாங்குவீர்கள். வாகன யோகம் சிலருக்கு உண்டாகும். திருமணத் தடைகள் நீங்கி, நல்ல வாழ்வு அமையும். தெய்வத் திருப்பணிகள் தேடிவந்து சேரும். மனத் திண்மை, தைரியம் கூடும். சிலர் பூர்வீகச் சொத்துக்களை விரயம் செய்து, புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள்.

இதெல்லாம் கிடைத்தாலும் உங்கள் வாக்கில் நிதானம் தேவை. ஆடி மாதம் 9 ஆம் திகதிவரை குடும்பத்திற்காகப் பல செலவுகளைச் செய்யவேண்டிவரும்.

தொழிற்துறையில் உங்கள் மனவலிமை அதிகமாக இருக்கும். நினைப்பீர்கள், செய்து விடுவீர்கள், இது உங்களின் இயல்பு. தற்சமயம் இந்த தன்மைதான் மேலோங்கி இருக்கும். சிலருக்குத் தர்மஸ்தாபனங்களில் தலைமைப் பதவி கிடைக்கும். தர்ம சிந்தனையோடு வாழ்வீர்கள். அரசின் ஆதரவும், அதிகாரிகளின் நேசக்கரமும் கிட்டும்.

உங்களில் சிலருக்குக் கார்த்திகை மாதம் 12 ஆம் திகதிக்குப் பின் நிலபுலன்களை வாங்கும் யோகம் உண்டு. வீடுகள், தொழிற்சாலைகள் கட்டும் வாய்ப்புக் கிடைக்கும்.

சிலருக்குச் சகோதர, சகோதரிகள் வழியாக ஆதரவும், உயர்வும் கிடைக்கும்.

இந்த ராசிப் பெண்கள் - தங்கள் பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்க வாய்ப்புக் கிடைக்கும். ஆண்குழந்தைகள் பாசத்துடன் இருப்பார்கள். அவர்களது படிப்பாலும், விளையாட்டு ஆர்வத்தாலும் பெருமை அடைவீர்கள். ஈன்ற பொழுதைவிட இப்போது உங்கள் குழந்தைகளைப் பார்த்துப் பார்த்துப் பூரிப்படையும் நேரம் வருகிறது. சம்பளம் உயரும். ஆடை, ஆபரணங்களை இந்தக் குரு பெயர்ச்சி காலத்தில் வாங்கிக் குவிக்கலாம். கணவர் உங்கள் சொல்கேட்கும் பொம்மையாய் இருப்பார். இந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்தி, பணத்தைக் குழந்தைகளுக்குச் சேர்த்துவிடுங்கள். யோக குரு உங்கள் வாழ்வை உயர்த்துவார்.

**ஆடி**

சகோதரர் வழியாக ஆதரவு அதிகம் கிடைக்கும். மனைவியின் உடல்நலம் கெடும். மனக்கட்டுப்பாடு மிகமிக அவசியம்.

**ஆவணி**

உங்கள் தாயாரின் உடல்நலம் எதிர்பாராத விதமாகக்கெட வாய்ப்புக்கள் உண்டு. மனதில் தேவை இல்லாக் கவலைகள் குடிகொள்ளும். உறவுகள் சில பகைக்கொடி தூக்கிநிற்கும்.

**புரட்டாதி**

மகன், மகளின் உடல்நலம் பாதிப்பு ஏற்படும்.

**ஐப்பசி**

நல்ல இராஜயோகங்களை அனுபவிக்க் உள்ளீர்கள். உலகெங்கும் உங்கள் புகழ்பரவும். உங்கள் பகைவர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைவார்கள்.

**கார்த்திகை**

விநாயகர் கோயிலுக்குத் தவறாது செல்லுங்கள். தந்தையாரின் உடல்நலம் கெடும். அவருக்குத் தலை மற்றும் வலக்கண்ணில் நோய் தோன்றும்

**மார்கழி**

அவசியம் உபதேசம் பெற்று, முறையான சூரிய நமஸ்காரம் செய்யுங்கள். உங்கள் கண்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**தை**

தந்தையாரின் உடல்நலம் கெடும். கடந்தகாலங்களில் செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் கிடைக்கும். உங்கள் மனம் தர்ம சிந்தனையில் ஈடுபடும். பெரும் செல்வம் சேரும்.

**மாசி**

உங்கள் புகழ், பலம், தொழில் இவை அனைத்தும் ஒருங்கே பெருகும்.

**பங்குனி**

உங்கள் துன்பங்கள் அனைத்தும் துடைக்கப்படும். வருமான வசதிகள் பெருகும். பணம் கையில் ஏராளமாகப் புரளும்.

**சித்திரை**

மீண்டும் உங்கள் தந்தையாரின் உடல்நலம் பாதிப்படையும். மருத்துவச் செலவு ஏற்படும்.

**வைகாசி**

முன்கோபம் வரும். ஆசார அனுஷ்டானங்கள் பெருகும். குழந்தைகள் நல்ல பரீட்சைச் சித்திகளுடன் தேறி, மனதை அமைதிப்படுத்துவார்கள். குழந்தைகளின் வெற்றி கண்டு பூரிப்பு அடைவீர்கள்.

**ஆனி**

உங்கள் வாக்குக் கடுமையாகும். வேண்டாம் இந்தக் கடுமை.

(நாளை மிதுனராசி தொடரும்...)

# கிளிநொச்சி மைதானங்கள் விரைவில் புனரமைக்கப்படும்!

## கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை உதவுகிறது

(ஆழியவளை)

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானம், மத்திய கல்லூரி மைதானம் ஆகியவற்றைப் புனரமைப்பதற்கு, இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நிதியுதவி வழங்கவுள்ளது.

இப்புனரமைப்புப் பணியின் முதற்கட்டமாக வீரர்கள் ஓய்வறை, பார்வையாளர் அரங்கு என்பன மைதானத்தில் அமைக்கப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டத்திற்கான மதிப்பீட்டினையும், வரைபடத்தையும் உடனடியாகத் தமக்கு அனுப்பி வைத்தால், தேவையான நிதியைத் தாம் விரைவில் அனுப்பிவைப்பதாக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அதிகாரிகள் குழு அண்மையில் கிளிநொச்சிக்கு வருகைதந்து இந்த மைதானங்களைப் பார்வையிட்டதையடுத்தே, இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)



சுற்றுச் சூழல் வாரத்தினை முன்னிட்டு - மானிப்பாய் கிழக்கு பாரதி சனசமூக நிலையத்தினர், நிலையத்தின் முன்பள்ளியைச் சூழவுள்ள பகுதியில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.


வாழ்க வளமுடன்




ஐந்தாவது அகவையில்



பெயர் : ஜெ.மனோஜன்
முகவரி : கற்கோவளம், பருத்தித்துறை.

ஆறாவது அகவையில்

பெயர் : சே.அபிநயா
முகவரி : வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்ப..


# கணிதம், மொழிப் பாடங்களுக்கு மேலதிக கற்பித்தல் நேரங்கள்!

## யுனிசெப் உதவியுடன் செயற்திட்டம் அமுலாகிறது

(ஆழியவளை)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கணிதம், மொழி ஆகிய பாடங்களில் அண்மைக்காலமாக அடைவு மட்டங்கள் குறைவடைந்து வருவதனை நிவர்த்திசெய்யும் பொருட்டு, யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன், விசேட செயற்திட்டங்கள் வலயக் கல்வித் திணைக்களங்களினால் - இம்மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் - தரம் 6 இல் கணிதச் செயற்பாடு, மொழித் திறன் விருத்தி ஆகியன விசேட செயற்திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு வருவதுடன், வாரத்தில் ஒவ்வொரு பாடத்தினையும் மேலதிகமாக இரண்டு மணித்தியாலங்கள் கற்பிப்பதற்கு ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த விசேட செயற்திட்டத்திற்கான - வள ஆளணியினருக்கான கொடுப்பனவுகள், செயலமர்வுகள் மற்றும் மாணவர்களுக்குரிய விளக்கங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்தில் 30 பாடசாலைகளில் இச்செயற்திட்டம் இம்மாதம் முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. (122)

## கூட்டுறவு தின விழா பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 27 ஆம் திகதி திருகோணமலையில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படவிருந்த கூட்டுறவு தினவிழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக, தலைமை அலுவலகத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாக - யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# துன்பங்களைக்கூட மறக்கச்செய்யும்



**மிகவும் நுட்பமானதும், உடம்புக்கு அசதியானதுமான திரையோவியம் கலைநுட்பத்தை - நிதானமாகவும், பொறுமையாகவும், கலை ரசனையுடனும் அதிலேயே லயித்துச் செய்துவந்தால் - அதிலுள்ள கஷ்டங்கள் பெரிதாகத் தெரியாது. அத்துடன், எமக்கு இருக்கின்ற துன்பங்களையும் மறக்கச்செய்யும் அருமையான கலைப்பணி என்கிறார், செட்டித்தெரு - நல்லூரைச் சேர்ந்த செல்வி யசிந்தா (மணியம் ஆட்ஸ்).**

என்னுடைய இந்தத் தொழிலுக்குக் குரு என்று ஒருவரும் இல்லை. எனது மாமனார் செய்துவந்ததை, நான் பரம் பரையாகக் கற்றுக்கொண்டேன்.

1985 ஆம் ஆண்டு இந்திராகாந்தியின் அஞ்சலி நிகழ்வு ஒன்றிற்காக, அவரது உருவத்தைத் திரையில் வரைந்தேன். அதுதான் நான் முதன்முதலாக வரைந்து வர்ணந்தீட்டி வெளியிட்ட முதலாவது திரைச்சீலை.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர், நான் வரைந்து வர்ணம்



தீட்டும் ஓவியங்களை எனது மாமனார் திருத்தம் செய்து கொடுப்பார். 1995 ஆம் ஆண்டுக்குப் பின்பு, நானே தனியாக சகலதையும் செய்து கொடுப்பேன். இப்போது அதில் நிறை யவே தேர்ச்சி பெற்றிருக்கிறேன். நான் முன்னர் வரைந்து கொடுத்த ஓவியங்களை இப்போது பார்க்கும்போது, அதில் இருக்கிற நிறையப் பிழைகளை என்னால் கண்டுகொள்ள முடிகிறது.

ஒரு ஓவியத்தை வரையத் தொடங்கினால் அதிலேயே லயித்துக் வரையத் தொடங்குவேன். இருள்கின்றவரை வரைந்துகொண்டே இருப்பன்.

இங்கு பிரச்சினை ஏற்பட முன்னர், மாமாவிடம் **Enlarger** இருந்தது. அதில் போட்டு அளவுக்கு ஏற்றமாதிரி பெருப் பித்துக் வரைவேன். பின்பு யாழ்ப்பாணத்தில ஏற்பட்ட இடப் பெயர்வோடு அதெல்லாம் காணாமற்போய்விட்டது.


அதால இப்போது படங்களை வைத்து, **Square** பண்ணி ஒரு அளவுத் திட்டம் போட்டு வரைவேன்.

ஓவியத்தில் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து, சிரமப்பட்டு வரையவேண்டிய பகுதி, கண் வைக்கிறதுதான். கண்ணில் கறுத்தமுழியில் ஒரு சின்ன அசைவு இருந்தால்கூட, அது ஓவி யத்தின் தன்மையை மாற்றிவிடும். கடவுளின் படத்தில் ஒரு சின்னப் பிழை இருந்தால்கூடத் தெரி யாது. ஆனால், மனிதர்களின் படம் வரையும்போது, பிழைவிட்டால் அது அப்படியே தெரியும்.

இறந்தவர்களின் படங்களும் நான் வரைவேன். அப்போது அவதானமாக வரையவேண்டும். ஒரு சின்ன மாற்றம் என்றாலும் அது வேறெங்கோ பார்ப் பதுபோல இருக்கும் நாங்கள் வரைகின்ற ஓவியங்கள் எங்கே நின்று பார்த்தா லும், எங்களைப் பார்ப்பதுபோல இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த ஓவியத்தின் உண்மைத்தன்மை புலப் படும்.

நான் பாடசாலையில் படிக்கும் போது, சித்திர பாடம் எடுக்கவில்லை. க.பொ.த. உயர்தர வகுப்பில் சித்திர பாடம் படிக்கவும் இல்லை. ஒருவேளை இப்போது, சித்திர பாடத்தைக் கற்ப தற்கு மாணவர்களுக்குக் கிடைத்தி ருக்கின்ற வாய்ப்பு முன்னர் எனக்கும் கிடைத்திருந்தால், இன்னும் முன்னேறியிருப்பேன். இப்போது பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் எனத் தனி யான ஒரு கற்கைநெறி இருக்கிறது. முன்னர் நாங்கள் படிக் கும்போது அந்த வாய்ப்புக்கள் கிடைக்காதது கவலைதான்.

யாழ்.குடாநாட்டின் மிகவும் பிரபலமாக இருக்கின்ற பல ஆலயங்களில், நான் வரைந்த திரைச்சீலைகள் இருக்கின் றன. கோயிலுக்குப்போய் வரைந்த ஓவியங்களும் இருக்கின்றன. ஆனால், அதற்குரிய கௌரவம் எனக்கு வழங்கப்படுவதில்லை. பெண் என்றபடியால்தான் அப்படியான ஒரு நிலை எனக்கு ஏற்பட்டிருக்கு என்று நினைக்கிறேன். இதே வேலையை ஒரு ஆண் செய்யும்போது, அவருக்கு உரிய கௌரவம் வழங்கப் படுகிறது.



நல்லூர்க் கோயில், சுதுமலை அம்மன் கோயில், அரி யாலைப் பிள்ளையார் கோயில், இணுவில் சிவகாமி அம்மன்

# அருமையான கலைப்பணி இது!



கோயில், பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் போன்ற கோயில்களில் நான் வரைந்த திரைச்சீலைகளும், சுவர் ஓவியங்களும் நிறையவே இருக்கின்றன.

இவை தவிர, இறந்தவர்களின் படங்கள் வரைந்திருக் கிறேன். ராஜா தியேட்டரில் படையப்பா திரைப்படத்தின் ஒரு "கட் அவுட்" காட்சியை சுவரில் வரைந்திருக்கிறேன். எனது ஓவியத்தின் கீழே யசிந்தா - மணியம் ஆட்ஸ் என்று போடுவேன்.

சுவிஸ், கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலுள்ள இந்து ஆலயங்களுக்கும், திரைச்சீலை வரைந்து அனுப்பியிருக் கிறேன்.

இந்தக் கலையில் பெண்கள் ஆர்வம் காட்டுகின்றது குறைவுதான். மிகவும் நுட்பமானதும், உடம்புக்கு அலுப்பா னதுமாக இருக்கும் இந்தத் தொழிலை - ஒரு கலை ரசனை யோடு அதிலேயே லயித்துச் செய்தால் கஷ்டங்கள் எதுவுமே தெரியாது.

*சந்திப்பு:* **உஷா, கலானந்தி.**



# பெண்களைப்பற்றிய சில குறிப்புகள்

❖ **உயர்ந்த பண்புகளையும், தூய்மைக் குணத்தையும் பெண்கள்மூலம் உலகுக்குப் பரப்பக் கடவுள் விரும்பினார் என்று நான் கருதுகிறேன். இந்த உலகுக்குக் கடவுள் படைத்தவைகளுள் மிக மேலானது உயர்ந்த தன்மைகளுடைய பெண் களின் உள்ளம் என, நான் பழைய மாட்டின் லூதரை ஒப்பக் கருதுகிறேன்.**

*ஹென்றிவாட் பீச்சர்.*

❖ **பெண்களின் குறைபாடுகள் பலவற்றுக்கும் ஆண்களே காரணம், எங்கள் மேலான குணங்களுக்குப் பெண்களே காரணம்.**

*சாள்ஸ் லெமிசில்.*

❖ **பெண்ணும், ஆணும் ஒரு கத்தரிக்கோலின் இரண்டு அலகுகள் போன்றவர்கள். ஆணும், பெண்ணும் சேர்ந்து ஒருவரையொருவர் நிறைவடைவிக்கின்றனர்.**

*பென்ஜமின் ஃபிராங்ளின்.*

❖ **நாம் மற்றைய பொருட்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கூறுவதுபோல, ஆண்கள் மேலானவர் அல்லது பெண்கள் மேலானவர் என்று மூடத்தனத்தால் கூறுகின் றோம். இரு வகையாரிடத்தும் - மற்றையவரிடத்தில் இல்லாத சிறந்த தன்மைகள் இருக்கின்றன. ஒருவரிடத்தில் இருப்பது மற்றையவரிடத்தில் காணப்படுவதில்லை. ஒருவரிடம் இல்லாதவற்றை மற்றையவர் கேட்டுப் பெற்றுக்கொள்வதால் நிறைவும், மகிழ்ச்சியும் உண்டாகின்றன.**

*ஜான் ரஸ்கின்.*

❖ **வானத்தில் நட்சத்திரங்கள் பாடல்களாக விளங்குதல்போல, பெண்கள் உலகின் பாடல்களாக விளங்குகின்றனர்.**

*ஹார்கிரேவ்.*

❖ **ஒரு பெண் பேசும்போது, நீயும் பேசாதே! புன்சிரிப்புப் போதும்.**

*கன்பூஷியஸ்.*

❖ **பெண்ணை அழும்படி செய்யாதே! ஆண்டவன் அவள் கண்ணீரை அளந்து வைப்பான்.**

*இஸ்ரேல் நாட்டுப் பழமொழி.*

❖ **பெண்ணின் மடியில் இறையன்பு வளர்கிறது.**

*இக்பால்.*

# அறிந்து கொள்ள...

- **தக்காளிப் பழங்களை உப்பு நீரில் போட்டு வைத்தால், மூன்று நாட்களுக்கு அவை பழுதாகாமல் இருக்கும். நன்றாகப் பழுத்த தக்காளிப் பழத்தைவிட, அரைவாசி பழுத்த தக்காளிப்பழமே சுவையானது.**
- **கீரை வாடாமல் இருக்க, வேரை வெட்டிவிட்டு கீரையைத் தண்ணீருக்குள் வைத்தால், அது வாடாமல் இருக்கும்.**
- **வெண்டிக்காயின் நுனிப்பகுதியை முறித்துப் பார்க்கும்போது, அது உடனே முறியவேண்டும். இல்லாவிடின் அது முற்றியதற்கு அறிகுறி.**
- **வெங்காயம், வாழைக்காய், மாங்காய் போன்றவற்றை வாங்கும்போது, விரல்களால் அமர்த்திப்பார்த்து வாங்கவும்.**

# சான்விச்

**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| வெட்டிய பாண் | - | 1 பைக்கற் |
| உருளைக்கிழங்கு | - | 100 g |
| கரட் | - | 100 g |
| பீற்றூட் | - | 100 g |
| வெங்காயம் | - | 1/4 kg |
| மிளகாய் | - | 200 g |
| மாஜரின் | - | 1 பைக்கற் |
| மிளகுத்தூள் | - | அளவாக |
| உப்புத்தூள் | - | அளவாக |



**செய்முறை**

சான்விச்சுக்குச் சேர்க்கும் மரக்கறிகளான - உருளைக்கிழங்கையும், பீற்றூட்டையும் அவித்தெடுத்து, அதன் தோலினை உரித்துச் சுத்தம் செய்யவும். அதன்பின், உரு ளைக்கிழங்கை நன்றாக மசிக்கவும். மசிக்கும்போது- உப்புத்தூள், மிளகுத்தூள் என்பவற்றை அளவாகச் சேர்த்துக்கொள்ளவும். அதனுள் வெங்காயம், பச்சைமிளகாய் ஆகியவற்றைச் சிறுசிறுதுண்டுகளாக வெட்டி அதனுடன் சேர்க்கவும். இதேபோலவே பீற்றூட்டையும், கரட்டையும் ஸ்கிரேப்பரால் துருவி எடுக்கவும். வெட்டிய பாண் துண்டுகளில் மாஜரினைப் பூசிக்கொள்ளவும். பின்னர், ஒவ்வொரு துண்டிலிலும் - கரட், பீற்றூட், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் மசித்த சேர்வையைத் தனித்தனியே பூசியபின் ஒன்றாகச் சேர்த்து மூடி விரும்பிய வடிவத்தில் வெட்டி எடுத்துப் பரிமாறிக் கொள்ளலாம்.

# ஒரு பூவின் பயணம்

**குசினித் தேநீர்க் கோப்பைக்குள்**
**ஊறிப் பருத்துக் கிடக்கும் உன்**
**தலையையும்**
**அம்மன் கோயிலில் சரணாய்க் கிடக்கும்-**
**உன்**
**கால்கள் ஒரு சோடியையும் உன்**
**உடலில் பொருத்தி**
**ஊருக்கு வெளியே வந்து பார்**
**குட்டி இளவரசிகளின் கண்களை**
**ஒருக்கால்**
**அவை மொழிந்து தீர்க்கும்**
**நம்மில் சிலரின் அடிப்படைத் தேவைகள்**
**போதும் போதுமெனச் சிறிது அதிகப்படி**
**யாகவே**
**பூர்த்தியாகி விட்டதைப் பற்றி.**

பிரசித்திபெற்ற ஆழியாளின் கவிதை வரிகளில் சங்கமித்துள்ள பெண்ணிலைப் பாடுகளோடு இன்றைய' எமது பயணம் ஆரம்பமாகிறது. ஒரு குடும்பப் பொறுப்புக் களில் கட்டுண்டுள்ள பெண்- கண்ணுக்குப் புலனாகாத ஒரு யுத்தத்தில் அகப்பட்டுத்

## சாவினை உதைத்து.... மண்ணிலெம் காலினை ஆழப்பதித்து....

துண்டங்களாகச் சிதறியிருக்கின்ற நிலை, எமது யாழ்ப்பாண சமூகத்தின் இயல்பு நிலையாகக் காணப்படுகின்றது. மேலைத் தேசக் கலாசாரத்திலிருந்து வேறுபட்டு, தமது வாழ்வை முழுமையாகக் கணவனுக்காகவோ அல்லது பிள்ளைகளுக்காகவோ அர்ப்பணிக்கும் நிலை, இங்கு பெண் விடுதலை நோக்கில் எடுத்து நோக்கப் படுவது குறைவு. இது சமூகக் கட்டமைப் பின் படிமானமாக, காலங்காலமாகத் தொடர்ந்து வருகின்றது.

**எனது வெட்க உணர்வையும்**
**நாணத்தையும் கொண்டு**
**நீண்டகாலமாக நீ லாபமீட்டி வந்தாய்**
**எனது தாய்மையையும்**
**எனது விசுவாசத்தையும்**
**வணிகப் பொருளாக்கினாய்**
**எங்கள் மடிகளிலும் மனங்களிலும்**
**மலர்கள் மலரவேண்டிய**
**பருவம் இப்போது வந்துவிட்டது.**

**சுவரொட்டியிலுள்ள அந்தப் பெண்**
**அரை நிர்வாணக் கோலத்தில்**
**காலுறைகளையும் காலணிகளையும்**
**விற்றுக் கொண்டிருக்கும்**
**அந்தப் பெண்ணல்ல நான்**

என்ற கிஸ்வர் நஹீத்தின் கவிதைப் பெண்-தன் விடுதலைக்கான முதற்பொறியை, தானே உரசிக் கிளப்புவதைக் காணுங்கள். இவ்வாறான படிநிலைகளைக் கடந்து பெறப்பட்டதன்றி - தேசத்தில் கிளர்ந்த இனவிடுதலைப் போராட்டத்தில் பெண் பங்குகொண்டபோது, ஈழத்துப் பெண்களுக்கான புதியநோக்கு நிலை இங்கு கிளைத்ததாகக் கொள்ளலாம். இன இடை யுத்தமானது - ஒட்டுமொத்த சமூகத்திலும் கால்பதித்து நடந்து, போரின் விளைவுகளை எம்தேசப் புல்லும் பூவும்கூட அறியும். பல நூற்றுக்கணக்கான புரட்சிப்பாடல்கள் இதனை எடுத்திசைக்கும்.

ஒரு இனம் நசிந்துப் போகும்படி, இன்னொரு இனம் வேண்டிக்கொள்ளமுடியாது. ஒரு தனிமனிதன் இறந்து போகும்படி, இன்னொரு தனிமனிதன் விரும்பிக்கொள்ள முடியாது. அதனால், போராட்டங்கள் உலகவரலாற்றின் தவிர்க்கமுடியாத நியதியாக எழுந்து

**அத்தியாயம் 15**

கொண்டே இருக்கின்றன.

வாழ்வின் தொடர்ச்சி பற்றியோ, அது வழங்கும் வசதிகள் பற்றியோ கருதாது - தமது வாழ்வைத் தேசத்திற்காக அர்ப்பணித்தல் என்பது, உண்மையில் மகத்தான ஒரு உணர்வு நிலையாகும்.

ஒவ்வொருவருக்கும் தான் பிறந்த பூமி புனிதமானது. 1854 இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஃபிராங்லின் பியேர்ஸ் ஒரு சிவப்பிந்திய நிலப்பகுதியை வாங்க விரும்பிய போது, சிவப்பிந்தியத் தலைவரான **Chief seattle** அனுப்பிய பதில் - ஒரு மண்ணை நேசிக்கும் மனிதனின் இதயத்துடிப்பாக இன்றும் நிலைத்திருக்கிறது. அதன் சிலபகுதிகள் வருமாறு -

“இந்தப் பூமியின் ஒவ்வொரு அம்சமும் என் மக்களுக்குப் புனிதமானது. ஒளிரும் ஒவ்வொரு ஊசி இலையும், மணல்பரந்த ஒவ்வொரு கரையும், இருண்ட காடுகளின் கவியும் பனிமூட்டமும், காட்டுக்குள் இருக்கும் ஒவ்வொரு வெட்ட வெளியும், ரீங்காரமிடும் வண்டுகளும் எம்மக்களின் நினைவிலும், அனுபவத்திலும் புனிதமானவை. வாசமிக்க மலர்கள் எங்கள் சகோதரிகள். மானும், குதிரையும், பெருங்கழுகும் எங்கள் சகோதரர்கள். ஓடைகளிலும், ஆறுகளிலும், பளபளத்து ஓடும் நீர் எங்கள் மூதாதையரின் இரத்தம்...”



ச.சாரங்கா

இவ்வாறான மண் நேசிப்பு அல்லது நாட்டுப் பற்றின்மீது - கட்டியெழுப் பப்பட்ட தேசவிடுதலைப் போராட்டமானது- கண்ணீரும், செந்நீரும் கொண்டு எழுதப்பட்டது. ஒரு புதிய உலகிற்கான எதிர்பார்ப்புடன் விலங்குகள் உடைதல் பற்றிய கனவுகள் மக்கள் மத்தி யில் எழுந்தபோது, பெண்களும் எழுச்சி கொள் ளும்நிலை இங்கெழுந்தது.

சமூகவிடுதலை கருதிய பயணத்தில் - பெண்விடுதலை இயல்பாக நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. இத்தருணத்தில், நாம் முன் அத்தியாயங்களில் எடுத்து நோக்கிய பெண்ணியக் கருத்துக்கள் நினைவுகூரத்தக்கன.

**பெண்ணைப் பேச**
**பெண்ணே எழு**

**கூந்தலைச் சுருக்கு**
**கூச்சம் எதற்கு**

**ஆண் பெண்**
**சுவர்**
**இடி**

போன்ற அறிவுமதியின் பெண்விடுதலைக் கவிதைகளின் உட்பொருளினை இதற்குச் சான்றாகக் காட்டலாம். உச்சப் போராட்ட காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் முன்னெடுக்கப்பட்ட தேச விடுதலைச் சமர்களில் பெண்களின் பங்கு, ஆண்களுக்குச் சளைத்ததாக இல்லை. ஆண் - பெண் பேதங்கள் இயல்பாகக் கடக்கப்பட்ட நிலையில், பெண்களின் எழுச்சி புதிய உலகினை நோக்கிய பயணத்துடன் இரண்டறக்கலந்தது.

ஒரு சாண் நிலம் எஞ்சி இருக்கும்வரை, ஒரு ஒலிவ் மரம் எஞ்சியிருக்கும்வரை, ஒரு எலுமிச்சை மரமோ சப்பாத்திக் கள்ளியோ எஞ்சியிருக்கும்வரை எனப் போரைப் பிர கடனம் செய்வதான உறுதியுரையுடன் ஆரம்பமாகும் ஃபத்வாதுக்கானின் ஒரு கவிதை- இருபது கமாண்டோக்களுக்குச் சமனானதென மோஷே டபானால் கருதப்பட்டுத் தடைசெய்யப்பட்டது. அதன் இறுதிவரிகள் உக்கிரமான போரியல் வரிகளாகின்றன.

**எனது கண்கள் இருக்கும் வரை**
**எனது உதடுகள் எனது கைகள்**
**எனது தன்னுணர்வு இருக்கும் வரை**
**விடுதலைக்கான பயங்கரப் போரை**
**எதிரியின் எதிரில்**
**நான் பிரகடனம் செய்வேன்.**

போர் முற்றும் ஓய்ந்துவிடாத தேசத்தில், சமாதானக் காற்று வீசிக்கொண்டிருக்கும் பொழுது இது. போரியல் ஆய்வுகளுக்கான பொழுதல்ல இது. எனினும், பேசப்படாத்திருந்த பொருள் பற்றிப் பேசத் துணிந்த பெண்முகங்கள் கண்டோம், இனிச் 'சொல்லாத சேதி'களாய் ஈழத்துப் பெண்களின் வாழ்வில் புதைந்துள்ள நெருக்கடிகளை நோக்கி நகரலாமா?

(பயணம் தொடர்கிறது)

# எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்...



**பெ**ற்றோர்கள் தங்கள் உயிருக்கும் மேலாக, விலை மதிக்கமுடியாத அன்பு செலுத்துகின்ற சொத்து ஒன்று இருக்குமானால், அது தாங்கள் பெற்றெடுத்த குழந்தையைத் தவிர, வேறெதுவாக இருக்கமுடியும்?

ஒரு தாய் தன் குழந்தைச் செல்வங்களைத் தன் கண்ணைப்போல் பாதுகாப்பவள். அதனால் தான் இந்த உலகில் எல்லாவற்றையும்விட மேலானது தாயன்பு எனப்படுகிறது. அது மனிதனுக்கு மட்டுமல்ல, கொடிய விலங்குகளுக்கும் பொருந்தும்.

ஐந்தறிவு படைத்த ஜீவராசிகளே தம் பிள்ளைகளில் கவனம் செலுத்தும்போது, ஆறறிவு படைத்த மனிதகுலம் சிலவேளைகளில் பிள்ளைகள் மீது கவனம் செலுத்தாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமேயாகும்.

சிறுபராயத்தில் பெற்றோர்கள், சிறுவர்களை வழிநடத்துகின்ற விதம்தான், பிற்காலத்தில் அவர்களுக்கு உறுதுணையாக அமையும்.

சில பெற்றோர் தம்குழந்தைகளைப் பிறர் தூக்குவதோ, கொஞ்சுவதோ பிடிக்காது. இதற்குக் காரணம் - சுத்தமின்மை, கண் திருஷ்டி போன்றவையாக இருக்கலாம். ஆனாலும், இப்படி வளர்க்கப்படுகின்ற குழந்தைகள் நாளடைவில் தனிமைப்படுத்தப்படுகின்றனர். மிக்க கூச்சசுபாவம் உள்ளவர்களாக வளர்ந்து விடுகிறார்கள்.

இன்னும் சில பெற்றோர் தம்பிள்ளைகள் என்ன கேட்டாலும், உடனே அதை வாங்கிக் கொடுத்துவிடுவார்கள். இது அவர்களின் மனதை நோகடிக்காமல் இருப்பதற்காக என்று- பெற்றோர், காரணம் கூறுகின்றனர்.

உண்மையில், இது தவறானதொரு செயற்பாடாகும். ஏனெனில், உங்களிடம் இருக்கும் போது வாங்கிக் கொடுப்பீர்கள். அதேசமயம் இல்லாதவேளைகளில் நிலைமையை யோசித்துப் பாருங்கள்....

பிள்ளைகளுக்குக் கொடுத்துப் பழக்கிவிட்டு, ‘இல்லை’ என்று கூறினால், அந்தப் பிள்ளை சிலவேளைகளில் களவு எடுப்பதற்குக்கூடப் பழகிவிடுகின்றது. எனவே, கொடுப்பதை அளவாகக்கொடுத்து, பிள்ளைகளை வளப்படுத்தவேண்டும்.

அதேசமயம் சில பிள்ளைகள் கண்டகண்ட பொருட்களையும் நாசப்படுத்திக் கொண்டிருப்பார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் பெற்றோர்கள்தான் பொறுமையாக இருந்து, பிள்ளைகளுக்குப் புரியும்படியாக அன்பாகச் சொல்லித் திருத்தவேண்டும். அதைவிடுத்து, அவர்களை அதிகார தோரணையில் திட்டித் தீர்த்தால், மீண்டும் மீண்டும் அதே தவறைத்தான் பிள்ளைகள் செய்வார்கள்.


கூடியவரையில் சிறுபிள்ளைகளின் முன்னால், பெரியோர்கள் தகராறு செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில், பெரியவர்களை (பெற்றோரை) பார்த்துத்தான் சிறியவர்கள் தம்மை வளர்த்துக்கொள்கிறார்கள்.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையில்... அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே...” என்பது சரிதானே...!

# பயனுள்ள குறிப்புக்கள்

- ❖ **காலணிகள் பழையதாகத் தோற்றம் அளிக்கத் தொடங்கினால், ஒலிவ் எண்ணெய் அல்லது எலும்பிச்சம்புளியை அதில் தடவுங்கள். உடன் பளபளப்பாகத் தோற்றமளிக்கும்.**
- ❖ **கைகளில் மருதாணி வைத்துக் கொள்வதற்கு முதல், எலுமிச்சஞ் சாற்றை விரலில் பூசிக்கொள்ளுங்கள். நன்றாகச் சிவக்கும்.**
- ❖ **பட்டுச்சேலைகளைக் கட்டிக் கழற்றி வைக்கும்போது, உடனே மடித்து வைக்கக்கூடாது. இரண்டு மணித்தியாலங்கள் வரையாவது உலர்ந்த பின் மடித்துவைத்தல் நன்று.**
- ❖ **தோசை மா கூடுதலாகப் புளித்துவிட்டதா? கவலைவேண்டாம். உடனே, பசுப்பால் அல்லது தேங்காய்ப்பாலை ஊற்றி நன்றாகக் கலக்கியபின், தோசையைச் சுட்டுப்பாருங்கள், புளிப்பு இல்லாமல் போய்விடும்.**
- ❖ **வெந்தயக் குழம்பு கொதிக்கும்போது- இரண்டு அப்பளங்களைப் பொரித்து, நொருக்கிப்போட்டுக் குழம்பை இறக்குங்கள். வாசனை உள்ளதாக இருக்கும்.**
- ❖ **பாகற்காயை வதக்கும்போது, பழப்புளிக்குப் பதிலாகக் கொஞ்சம் எலுமிச்சஞ்சாற்றைப் பிழிந்துவிடுங்கள். காய் - பச்சைநிறம் மாறாது, கசப்பும் இருக்காது.**

# சமையலறை கவனிப்பு



சமையலறை என்பது - வீட்டில் முக்கியமானதொரு பகுதியாகும். சமையலறை எப்போதும் சுத்தமாகவும், அழகாகவும் இருக்க வேண்டும். அதுமட்டுமன்றி, சமையலறையில் எப்போதும் அவசியமான பொருட்களே இருக்க வேண்டும். சிலர் சமையலறையில் அநாவசியமான, அளவுக்கதிகமான பொருட்களை நெருக்கி வைப்பதுண்டு.

இவ்வாறு அநாவசியமாகப் பொருட்களை நெருக்கி வைப்பதால், கரப்பான், எலி தொல்லைகள் பெருகவும் அது வாய்ப்பை ஏற்படுத்தும். இதனால், உணவு வகைகளும் அசுத்தம் அடையலாம்.

எப்போதும் அடிக்கடி தேவைப்படக்கூடிய சமையல் பொருட்களை, உடனடியாக எடுக்கக்கூடிய வகையில் வசதியான இடத்தில் வைக்கலாம்.

இதன்மூலம், அநாவசியமாக இவற்றைத் தேடி எடுப்பதற்காக நேரத்தைச் செலவு செய்யவேண்டி ஏற்படாது.

சமையலறைக்கான பொருட்களை வாங்கும்போது, அத்தியாவசியமான பொருட்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து வாங்குங்கள். இதன்மூலம் வீண்செலவுகளையும் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

எப்போதும் அழகான சமையலறையாகவும், சுகாதாரமான சமையலறையாகவும் இருத்தல்வேண்டும். அவ்வாறு அழகாகவும், சுகாதாரமாகவும் வைக்கவேண்டிய பொறுப்பு நம்கையில்தான் உள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## கபடம் தகர்க்கும் தெளிவரங்கு!

கொழும்பில் 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக் குழுவினரால் நடாத்தப்பட்ட தெளிவரங்கு - தென்னிலங்கையின் ஊடகங்கள் வழியாக முக்கியதுவப்படுத்தப்பட்டிருப்பதோடு, அங்கு எழுந்திருக்கின்ற தவறான தோற்றப்பாடுகளையும் நீக்குவதற்குப் பெருமளவில் உதவத் தொடங்கியிருக்கிறது.

இந்தத் தெளிவரங்கு தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்ற, கொழும்பின் சிங்கள, ஆங்கில மொழி ஊடகவியலாளர்கள் - இத்தெளிவரங்கு - தேவையற்ற சந்தேகங்களைப் போக்குவதற்கு நிச்சயம் பயன்படுமென எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்.

'பொங்கு தமிழ்' மட்டுமல்லாது - தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றிய திட்டமிடப்பட்ட திரிவுபடுத்தல்களும், உண்மையை மறைத்துப் பொய்மை பூசிய செய்திகளுமே - கடந்த பல வருடங்களாகத் தெற்கில் பரப்பப்பட்டு வந்தன.

சிங்கள அரசியல்வாதிகள் மட்டுமன்றி, சிங்கள, ஆங்கில மொழி ஊடகங்களில் பணியாற்றுபவர்களில் பெரும்பாலோரும் - இத்திரிபுகளுக்குச் சொந்தக்காரராயிருந்தனர்.

தமிழ்மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவதை - சிங்கள இனத்தின் மீதான ஆக்கிரமிப்பாகவும்,

தமிழ்மக்கள் ஒடுக்கப்படும்போதெல்லாம் - அதனை மகிழ்ச்சிக்குரிய தகவல்களாகவும், சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அடிமையான ஊடகங்கள் வழிமொழிந்தன.

இந்தச் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் கக்கிய விஷமதனமான கருத்துக்கள் - சாதாரண சிங்கள வாசகர்களிடையே தமிழரின் போராட்டம் பற்றிய தப்பபிப்பிராயங்களை உருவாக்கியிருந்ததை - அண்மையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்னிலங்கை மக்களுக்கு உதவச் சென்றிருந்த விடுதலைப் புலிகள் விவகாரமும் பிரதிபலித்தது.

தமக்கு உதவுவதற்காக - பெருஞ்சிரமங்களின் மத்தியில் நிவாரணப் பொருட்களைக் கொண்டு சென்றிருந்த விடுதலைப் புலிகளிடமிருந்து - அவற்றைப் பெற்றுக் கொள்ள வந்த சிங்கள மக்கள் - "இப்படியான உதவிகளைச் செய்யும் புலிகள் பற்றி, நாமறிந்தது வேறுமாதிரியல்லவா" என வியப்படைந்ததுடன்,

- விடுதலைப் புலிகளுடன், நட்புறவுடன் உரையாடி மகிழ்ந்ததையும் இங்கு குறிப்பிடுதல் சாலப் பொருத்தமானதாகும்.

தமிழ் மக்கள் பற்றி மாயைத் தோற்றங்களை உருவாககுவதிலும், தமிழர்களுக்கு எதிரான பௌத்த சிங்களப் பேரினவாதத்தைத் தூண்டுவதிலும் இன்னும் தொடர்ச்சியாகச் சில சிங்கள, ஆங்கில ஊடகங்கள் மிகுந்த அக்கறை காட்டியே வருகின்றன.

குறிப்பாக - அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தன - பல்கலைக்கழக மாணவர்களால் தடுக்கப்பட்டதான செய்தியை வெளியிட்ட கொழும்பு ஊடகங்கள் சில - அதனை, விடுதலைப் புலிகளே செய்ததாக அப்பட்டமான பொய்ப்பிரசாரத்தை தமது தலைப்புச் செய்திகளிலேயே வெளியிட்டன.

இது ஒரு அண்மைய உதாரணம் மட்டுமே - கொழும்பிலிருந்து வெளிவரும் குறிப்பிட்ட ஊடகங்களை வாசித்துவரும் எவருமே - அவை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இனவாதப் பிரசார யுக்தியைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இந்தப் பிரசாரத்திற்குள் அகப்பட்டு- பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு சாமரம் வீசக்கூடியவர்களான கருத்தியல் திணிப்புக்கு, சாதாரண வாசகர்கள் ஆட்பட்டு வருவதையும் எவரும் தடுத்துவிட முடியாது.

சாதாரண வாசகர்கள் மட்டுமல்ல - பல புத்திஜீவிகள் கூட - எவ்வாறான நிலைப்பாட்டிலுள்ளனர் என்பதை - இத்தகைய ஊடகங்களில் 'ஆசிரியர் கடிதங்கள்' எழுதிவரும் பெருமக்களின் கருத்துக்களிலிருந்து விபரமாக அறிந்துகொள்ளலாம்.

இப்படியான சூழ்நிலையில் - 'பொங்கு தமிழ்' பற்றிய தெளிவரங்கு - இத்தகைய மாயைக் கட்டுகளை உடைத்தெறியும் வல்லமையைக் கொண்டிருப்பதைத் தான் - கொழும்புப் பத்திரிகையாளர்கள் சந்திப்பின் உடனடி உணர்வலைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இதுபோன்ற தெளிவரங்குகள் - கொழும்பில் மட்டுமன்றி தெற்கின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படக்கூடிய வழிவகைகள் காணப்படுமாயின், அது நிச்சயம் ஓர் ஆக்கபூர்வமான முயற்சியாகவே இருக்கும். 'பொங்கு தமிழ்' மட்டுமல்லாது தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் உண்மையான தாற்பரியங்களை, சாதாரணச் சிங்கள மக்களும் உணர்ந்து, நியாயத்தை ஆதரிக்க முன்வருவார்களாயின் -

அது - இலங்கைத் தீவில் கௌரவமான அமைதியை ஏற்படுத்தத் துணையாகும் என்பதை மறுக்கமுடியாது.

இந்த முயற்சிகளில் - தமிழர் தரப்பிலிருந்து மட்டுமல்லாது - சிங்கள சமூகத்திலுள்ள நியாயத்தை நேசிப்பவர்களும் ஒன்றிணைந்து பங்காற்ற முன்வரவேண்டும். அதுவே - இனவாதம் களைந்த நட்புறவுச் சூழலை இரு இனங்களிடையே உருவாக்கவும் உதவும்.

# வடமராட்சிக் கடலில் அத்துமீறும் இந்திய மீனவர்

# உரிய நடவடிக்கை எடுக்கத் தவறின் கடற்தொழிலாளர் தாமே முடிவு எடுப்பர்!

## சமாசச் செயலாளர் சூரியகுமாரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளால், மீனவர்கள் தொடர்ந்தும் பாதிப்படைந்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினமும் இதுபோன்ற அத்துமீறல் சம்பவம் வடமராட்சிக் கடற்பரப்பில் இடம்பெற்றது. வடமராட்சி கடற்பரப்பினுள் - திடீரென நுழைந்த இந்திய மீனவர்களின் பெருந்தொகையான இழுவைப்படகுகளால், இப்பகுதி மீனவர்கள் தொழில் செய்யமுடியாதவாறு கரைக்குத் திரும்பிவந்தனர். தொடரும் இந்தச் சம்பவங்கள் பற்றி, ஏராளமான கடல்வளம் தொடர்ந்து இந்திய மீனவர்களால் அள்ளிச் செல்லப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் பற்றி, கடற்படையினர் கண்டும் காணாமலிருந்து இந்திய மீனவர்களுக்கு உடந்தையாகச் செயற்படுவதாக, வடமராட்சி. மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சகல தரப்பினருக்கும் எடுத்துக்கூறப்பட்டபோதும், இது தொடர்பில் எவரும் உரிய நடவடிக்கைகளை எடுக்காததனால், மீனவர்கள் மிகவும் விரக்தியடைந்துள்ளனர்.

இதனால் - மிக விரைவில் இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்காது போனால், கடற்தொழிலாளர்கள் தாமாகத் தீர்மானம் எடுத்துச் செயற்படும்பட்சத்தில் எவரும் தலையிடும் அதிகாரம் இல்லாமல் போய்விடுமென - வடமராட்சி கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசச்செயலாளர் க.சூரியகுமாரன் தெரிவித்தார்.

## தனியார் விமானங்களும் பலாலிக்கு இனி படையினரை ஏற்றிவரும்!

யாழ்ப்பாணத்தில் கடமைபுரியும் முப்படையினரையும் கொழும்புக்கும் - பலாலிக்கும் இடையில் ஏற்றி இறக்குவதற்குத் தனியார் விமான சேவையைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானம் எடுத்துள்ளதாக விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

இது சம்பந்தமாகப் பல தனியார் விமான நிறுவனங்களிலிருந்து கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும்,

இதில் எந்த நிறுவனம் கட்டணத்தைக் குறைவாக அறிவிக்கின்றதோ, அந்த நிறுவனத்துக்கே படையினரை ஏற்றி இறக்கும் வாய்ப்பு வழங்கப்படும் என்றும் விமானப்படைத் தளபதி குறிப்பிட்டார். தற்பொழுது விமானப்படையில் போதிய விமானங்கள் இல்லாததினால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, விமானப்படைத் தளபதி மேலும் தெரிவித்தார்.



மானிப்பாய் புனித அன்னாள் பாலர் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வின்போது, விநோத உடைப் போட்டியில் பங்கேற்ற சிறுவர்களைப் படத்தில் காணலாம்.

## பிந்துனுவெவ குற்றவாளிகளுக்கு மரணதண்டனையை நிறுத்துக!

### ஜனாதிபதிக்கு சிங்கள அமைப்பு கடிதம்

பிந்துனுவெவ கொலை சம்பந்தமாக மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளை, ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பாவித்து விடுதலை செய்யுமாறு, அநாகரிக தர்மபால அமைப்பு - ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவர்கள் குடும்பஸ்தர்கள் என்பதால், இவர்களுக்குக் கருணை காட்டுமாறு, ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பொலிஸ் அதிகாரிகளுக்கு மன்னிப்பளிக்காது போனால், இலங்கை வரலாற்றில் அது ஒரு கறைபடிந்த அத்தியாயமாகக் கருதப்படக்கூடுமென்றும் -

பிந்துனுவெவ கொலைகள் ஒரு சூழ்ச்சித்திட்டத்தின்கீழ் தான் இடம்பெற்றுள்ளது என்றும், அந்த அமைப்பு தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளது.

# 20 ஆண்டுகளுக்கு முன் எழுச்சிபெற்ற இடத்தில் மற்றுமொரு வரலாறு படைக்கப்பட்டுள்ளது!

## செல்லக்கிளி நினைவுதினக் கூட்டத்தில் ஈஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

இராணுவ அடாவடித்தனங்களுக்கு எதிராக மக்களும், மாணவர்களும் இணைந்து செயற்பட்டமை, எமக்கு உற்சாகத்தையும், பலத்தையும் அதிகரித்துள்ளதாக நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்தியில் அமைக்கப்பட்ட லெப்.செல்லக்கிளி அம்மானின் நினைவுத்தூபியைத் திரைநீக்கம் செய்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது -

மக்கள் நினைவுத்தூபி அமைப்பது எமது மாவீரர்களுக்குத் தான். இராணுவத்தினரை எதிர்க்கவோ, இராணுவத்தினருக்கு ஆத்திரமூட்டுவதற்காகவோ நினைவுத்தூபிகளை அமைப்பதில்லை. மாறாக மக்களின் மனங்களில் நீண்டகாலத்திற்கு மாவீரர்களின் நினைவுகள் நிலைத்திருப்பதற்காகவே நினைவுத்தூபிகள் அமைக்கப்படுகின்றன.

இவ்விடத்தில் இடம்பெற்ற இராணுவ அடாவடித்தனங்களுக்கு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவே உந்துசக்தியாக இருந்துள்ளது.



புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எம்மால் எதுவித பாதிப்பும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே, அமைதியாக இருக்கிறோம். எமது மாவீரர்களுக்கு எமது மண்ணில் நினைவுத்தூபி அமைப்பதற்கு அந்நியரிடம் கேட்கவேண்டியுள்ளது. இதை நாம் அனுமதிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், இராணுவம் இந்த நினைவுத்தூபியை அகற்றுவதென்றால், எமது சடலங்களுக்கு மேலாகச் சென்றுதான் நினைவுத்தூபியை அகற்றலாம் என மக்கள் திரண்டு நின்றனர். 20 வருடங்களுக்கு முன்னர் வரலாறு படைக்கப்பட்ட நிகழ்வொன்று நடந்தபகுதியில், இதனால், இன்னுமொரு புதிய வரலாறு படைக்கப்பட்டிருக்கின்றது என்பதையே அவதானிக்கமுடிகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# காவேரி ஆற்றுப்படுகை வழியே மன்னார் குடாவில் பெற்றோலியம்!

## ஒரு எண்ணெய்க் கிணறு தோண்ட ஒரு கோடி டொலர் தேவை

(மன்னார்)

இலங்கையின் மேற்குக் கரையோரத்திற்கு அண்மித்ததாக மன்னார் விரிகுடா - காவேரி ஆற்றுப்படுகைப் பிரதேசத்தில் எண்ணெய்ப் படிமங்கள் இருக்கலாம் என்று, மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பகுதிகளில் ஒன்றரைக்கோடி பீப்பா பெற்றோலியத்தைப் பெறக்கூடியதாக இந்தப் படிமம் இருக்கலாம் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்த விரிகுடா வலயத்தில் இந்தியா ஏற்கனவே எண்ணெய் வளத்தைக் கண்டுபிடித்திருக்கிறது. அதன்மூலம் வருடாந்தம் 30 லட்சம் பீப்பாய் பெற்றோலியமும், நாளாந்தம் 1 லட்சத்து எண்பதாயிரம் கனமீற்றர் இயற்கைவாயுவும் இந்தியாவில் பெறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆதாரங்களைத் தொடர்ந்து, இலங்கையின் கரையோரத்தில் இனங்காணப்பட்ட மேட்டு நிலமொன்றில் ஆய்வுக்காக எண்ணெய்க்குதம் ஒன்றைத் தோண்டுவதற்கு, 50 லட்சம் டொலர்கள் செலவாகுமென்றும்,

கடலில் எண்ணெய்க் கிணறு தோண்டுவதற்கு 1 கோடி டொலர்கள் தேவைப்படும் எனவும், மின்சக்தி எரிபொருள் அமைச்சு மேலும் தெரிவித்திருக்கின்றது.

# அமெரிக்கப் போர்க் கப்பலின் வருகை; பின்னணியிலுள்ள மர்மங்கள் என்ன?

(நேற்றைய தொடர்ச்சி...)

அதாவது, அமெரிக்கக் கப்பல் கொழும்பில் நிற்கும் நேரத்தில் ஒருவேளை ஏதாவது



அரசியல் மாற்றங்கள் நடந்து, அமெரிக்கக் கப்பல் தாக்கப்படும் சூழ்நிலை வந்தால், எப்படியான தாக்குதல்களை அமெரிக்கா எதிர்பார்க்கும் என்பதை, அமெரிக்கக் கப்பலில் இருக்கும் ஆயுதங்களின் தன்மையிலிருந்தே சொல்லிவிடமுடியும்.

அதன்படி இலங்கையில் தங்களுக்குச் சிக்கல் வந்தால் அல்லது USS O'Kane கப்பல் மீது தாக்குதல் நடந்தால் - அமெரிக்கக் கபல்களிலிருக்கும் உபகரணங்களை வைத்து, இலங்கையில் - அமெரிக்கா எதிர்பார்ப்பதும் முதலாவது - விமானத் தாக்குதல்களை அல்ல. இரண்டாவது - Long Range இலான தாக்குதல்களையல்ல.

அதேநேரத்தில் அமெரிக்கா எதிர்பார்ப்பது, முதலாவது - கடல்மார்க்கமாகவோ, தரைமார்க்கமாகவோ ஒரேநேரத்தில் நடைபெறக்கூடிய தாக்குதல்களை,

இரண்டாவது - அமெரிக்கக் கப்பல்களுக்கு மிக அருகாமையில் நடைபெறக்கூடிய தாக்குதல்களை,

மூன்றாவது - அவசியம் ஏற்பட்டால், கடல் வழி நகர்வின்மூலம் பின்பற்றக்கூடிய தாக்குதல்களை, அதாவது - கப்பல் நகர்ந்தபடியே தாக்கப்படக்கூடிய சாத்தியம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அமெரிக்கா USS O'Kane கப்பல் கொழும்புத் துறைமுகம்வரை தனியே அனுப்பப்பட்டதால், அமெரிக்கா - இலங்கையின் இராணுவ சூழ்நிலை பற்றிய எதிர்பார்ப்பு இப்படியாக இருக்கும் சாத்தியம் இருக்கிறது. அதே நேரத்தில் அமெரிக்க எதிர்பார்ப்புக்கள், கடைசியாகத் திகைத்துப்போன சந்தர்ப்பங்களும் கடந்தகாலத்தில் பலதடவைகளில் ஏற்பட்டிருக்கின்றன. முக்கியமாக வியட்னாமில்.

இதுதான் கொழும்புவரை வந்த அமெரிக்கக் கப்பல்களில் இருப்பவற்றின் கதை. அமெரிக்கக் கப்பல்களைக் கொழும்புவரை ஒப்பந்தம்மூலம் இழுத்துவந்த கதை.

இலங்கையுடன் அமெரிக்கா கடந்தவருடம் செய்துகொண்ட ஒப்பந்தம் பற்றி, இலங்கையிலுள்ள அமெரிக்கன் Embassy வெளியிட்ட விளக்கத்தை முதலில் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒப்பந்தத்திலுள்ள - ஒரு நாட்டுக்குத் தேவையான - இராணுவத் தேவைகள், உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், பழுதுபார்த்தல் போன்றவற்றை மற்றைய நாடு செய்து கொடுப்பது, இதற்குப் பிரதிபலனாக உதவி பெற்றுக் கொண்ட நாடு, அதே உதவிகளை அல்லது அதற்குச் சமனான உதவிகளைப் பதிலுக்குச் செய்துகொடுப்பது.


இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பெட்டகம்- அதே உதவிகள் அல்லது அதற்குச் சமனான பெறுமதியுள்ள உதவிகள். இந்தப் பெட்டகத்திலுள்ள விடயத்தை உதாரணத்துடன் கூறுகிறேன் யோசித்துப் பாருங்கள் - அர்த்தமாகவுள்ளதா என்று,

அமெரிக்காவின், போர்க்கப்பல்களும், போர் விமானங்களும் உலகம் முழுவதும் இயங்குகின்றன. அவை ஆசியாவுக்கு வரும்போது, இலங்கையின் துறைமுகங்களில் வந்து எரிபொருட்களையும் மற்றைய Supplyகளையும் நிரப்பிக்கொள்ளலாம்.

இலங்கையின் விமானத்தளங்களில் - அமெரிக்க விமானங்கள் எரிபொருள் நிரப்பிக் கொள்ளலாம். இது ஒப்பந்தத்தின் முதற்பகுதி.

ஒப்பந்தத்தின் இரண்டாவது பகுதி - அதே மாதிரியான உதவிகளை அமெரிக்கா செய்ய வேண்டும் என்றால் அர்த்தம் என்ன?

இலங்கையின் போர்க்கப்பல்கள் - வட அமெரிக்காவில் சஞ்சரிக்கும்போது, லொஸ்




ஏஞ்சல்ஸ் துறைமுகத்திலேயோ அல்லது இலங்கையின் போர்விமானங்கள் - வட அமெரிக்காவின் வான் வழியே பறக்கும்போது, நியூயோர்க் விமானத்தளத்திலோ, எரிபொருள் நிரப்ப அமெரிக்கா உதவி செய்யவேண்டும். இது. நடக்கிற காரியமா?

இலங்கையின் கடற்படைக் கப்பல்களும், போர்விமானங்களும் - இலங்கையின் கடல் அல்லது வான் எல்லைகளைத் தாண்டி வெளியே போவதென்றால், ஒருவேளை பாதைமாறி வழி தவறிப் போனால்தான் உண்டு.

அப்படியிருக்க, அவையெங்கே அமெரிக்காவரை போகப்போகின்றன. இந்த இடத்தில் தான் ஒப்பந்தத்திலுள்ள - குட்டி வாக்கியம் வருகிறது. 'சமனான பெறுமதியுள்ள உதவிகள்.'

இங்கு குறிப்பிடும் சமனான பெறுமதியுள்ள உதவிகள், அதிலும் இராணுவரீதியாக எவை தெரியுமா? இலங்கை இராணுவத்திற்குத் தேவையான யுத்த தளபாடங்கள், உதிரிப்பாகங்கள் வழங்குவது அல்லது இராணுவப் பயிற்சி தருவது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த ஒப்பந்தம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும் முன்னரே, முதலாவது அமெரிக்கக் கப்பல் - கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுவிட்டது. இதை எப்படி எடுத்துக் கொள்ளவது?

(தொடரும்.....)

**ரிஷி**

---

# சந்தனமடு ஆற்றில் நினைவுத்தூபி திறப்பு


**மட்டக்களப்பு - சித்தாண்டி, சந்தனமடு ஆற்றுப்பிரதேசத்தில் லெப்.கேணல் சிவமோகன், மேஜர் கலீல், மேஜர் அச்சுதன், மேஜர் பிரதீப், கப்டன் வசந்தன் ஆகியோரின் திருவுருவப்படங்கள் தாங்கிய நினைவுத்தூபி கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.**





**இந்நிகழ்வில் - கேணல் கருணா அம்மான் தேசியக்கொடியினை ஏற்றுவதை முதலாவது படத்திலும், மகளிர் சிறப்புத்தளபதி நிலாவினி ஈகச்சுடரினை ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.**





**திருவுருவப்படங்கள் தாங்கிய நினைவுத்தூபியை - பெற்றோர்கள் திரைநீக்கம் செய்வதை முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களில் ஒருபகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.**

---

# பாவற்குளம் காட்டுப்பகுதியில் சமூகச்சீரழிவு நடவடிக்கைகள்!

## நடவடிக்கை எடுப்பதாக புலிகள் அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா - பாவற்குளம் காட்டுப் பகுதியில் ஏனைய பிரதேசங்களில் இருந்துவரும் உல்லாசப் பயணிகள், சமூகச்சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்-

வவுனியா- பாவற்குளம் காட்டுப்பகுதி, இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கிறது - இது தொடர்பாக எமக்குப் பொதுமக்கள் நேரடியான முறைப்பாடுகளைச் செய்யாதபோதும், இவ்வாறு சமூகச் சீரழிவுகள் நடப்பது பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

வெளிமாவட்டங்களில் இருந்து வருவோரே, இப்பகுதிகளில் சமூகச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும்- அப்பகுதியில் தமிழ்மக்கள் வாழ்ந்துவருவதால், இராணுவத் தரப்பினருடன் தொடர்புகொண்டு, இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம், என அவர் மேலும் தெரிவித்தார்.

### பொலிஸைத் தாக்கி ஆயுதங்கள் அபகரிப்பு

(கொழும்பு)

புத்தளம் - ஆனமடுவ பகுதியில் பொலிஸ் ஒருவர் தாக்கப்பட்டு, அவரிடமிருந்து ஆயுதங்களும் அபகரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தின்போது, குறிப்பிட்ட பொலிஸாரிடமிருந்து- 84 எஸ். ரகத் துப்பாக்கியும், 30 ரவைகளையும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றுள்ளனர். (01)

### பரீட்சகர்களைத் தெரிவுசெய்வதற்கு புதிய நடைமுறை

(ஆழியவளை)

க.பொ.த (சாதாரண), க.பொ.த (உயர்தரம்) ஆகிய பரீட்சைகளுக்குக் கடமைபுரியும் அலுவலர்களைத் தெரிவுசெய்வதற்கு, இவ்வருடம் முதல் புதியமுறை கடைப்பிடிக்கப் படவுள்ளது.

மேற்படி பரீட்சைப் பணிகளில் பணியாற்ற விரும்பும் - அதிபர்கள், ஆசிரியர்கள் DP/HRB/02 என்ற விண்ணப்பப்படிவத்தினூடாக, வலயக் கல்வித் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இணைப்பு அலுவலர், உதவி இணைப்பு அலுவலர், மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர், நோக்குநர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். (122)

### ஒப்பந்தக்காரர் இல்லாததால் திட்டம் பாதிப்பு!

(ஆழியவளை)

முல்லை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் வாழும் மீனவர்களுக்குத் தங்குமிட வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, நிக்கொட் நிறுவனத்தினால் 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், இக்கட்டடங்களை அமைப்பதற்கு, ஒபந்தக்காரர் எவரும் இதுவரை முன்வரவில்லை என, முல்லை மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில்- செம்மலை, அளம்பில், சிலாவத்தை, கள்ளப்பாடு மத்தி, கள்ளப்பாடு வடக்கு, வண்ணாங்குளம், மணற்குடியிருப்பு, வட்டுவாகல், செல்வபுரம் ஆகிய 9 கிராமங்களில் மீனவர் தங்குமிடம் அமைப்பதற்கு, நிக்கொட் நிறுவனம் நிதி வழங்கியுள்ளது. (122)

# அமெரிக்கப் படையினர் மீது ஈராக்கில் மீண்டும் தாக்குதல்!

## சதாமின் புதல்வர்களது படங்களும் வெளியாகின



வட ஈராக்கில் நடந்த முற்றுகைத் தாக்குதலில் - சதாமின் இரு புதல்வர்கள் பலியானதாக, வெளியான தகவலைத் தொடர்ந்து, நேற்று அப்பகுதியில் நடைபெற்ற அதிரடித் தாக்குதலில் - மூன்று அமெரிக்கப்படையினர் பலியாகினர். எட்டுப்பேர் காயமடைந்தனர்.

இதேவேளை - அமெரிக்கப்படைகளால் கொல்லப் பட்டதாகக் கூறப்படும் சதாமின் இரு புதல்வர்களினதும் சடலங்களைக் காட்டும் புகைப்படங்களை, அமெரிக்க அரசு வெளியிட்டுள்ளது. இப்புகைப்படங்களை வெளியிடுவதன் மூலம்- ஈராக்கில் அமெரிக்கப் படையினர் மீதான தாக்குதல்கள் குறைத்துவிட முடியும் என புஷ் நிர்வாகம் கருதுகிறது.

இப்புகைப்படத்தில் கொல்லப்பட்ட சதாமின் புதல்வர்கள் எனக் கருதப்படும் இருவரினதும் சடலங்கள் தெளிவாக உள்ளதாகவும், அவர்கள் அடர்ந்த தாடியுடன்தான் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உதய் ஹுசையின் - சேதமடைந்த பல்வரிசையுடன் காணப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது அமெரிக்கப் படையினர் நுழையமுன் - உதய் தற்கொலை செய்திருக்கலாம் என எண்ணத் தோன்றுவதாகச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொல்லப்பட்டதாகக் கருதப்படும் சதாமின் புதல்வர்களின் புகைப்படங்களை வெளியிடும் அமெரிக்காவின் முடிவை, ஈராக்கிய இடைக்கால நிர்வாகம் வரவேற்றுள்ளது.




சதாமின் கொல்லப்பட்ட புதல்வர்கள் எனக் கருதப்படும் உதய் மற்றும் குசே ஆகியோரது படங்களை அமெரிக்கா நேற்று வெளியிட்டது.



பக்தாத்தில் நேற்று - நிறுத்தாது சென்ற கார் மீது, அமெரிக்கப்படையினர் நடத்திய தாக்குதலில் - அது எரிந்து சாம்பரானது. இதில் பயணம் செய்த ஈராக்கியர்களும் அந்த இடத்திலேயே பலியாகினர்.

## திரைப்பட இயக்குநராக ஈரானின் 14 வயது சிறுமி



சிறுமி ஹானா

ஈரானின் - 14 வயது இயக்குநரான ஹனா மக்மால்ப.்.ப் என்ற சிறுமி இயக்கிய திரைப்படம், இம்முறை 'வெனிஸ்' திரைப்பட விழாவில் முக்கிய விருதுகளை வென்றுள்ளது. இச்சிறுமியின் தந்தையாரும், மூத்த சகோதரியும் திரைப்பட இயக்குநர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹனாவின்' திரைப்படம்- முதன் முதலாகத் திரைப்படம் இயக்கியவர்களின் தரவரிசையில் முதலிடத்தைப் பெற்று, ஒரு லட்சம் யூரோ பரிசுத்தொகையைப் பெற்றுக் கொண்டது. திரைப்படத் தயாரிப்புக்களில் - சிறுவயது முதல் ஆர்வங்காட்டிவரும் ஹனா, தனது எட்டாவது வயதில் தயாரித்த குறும் திரைப்படமான, 'லொர்கானோ' வும் திரைப்படவிழாவில் காட்சிப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவரது மூத்த சகோதரியான சமீராவும் - மூன்று வருடங்களின் முன் தனது 20 ஆவது வயதில் இயக்கிய திரைப்படம், 'கனஸ்பாம்' திரைப்பட விழாவில் விருது பெற்றது.

உலகவலம்

## அல் - கொய்டாவின் உறுப்பினர்கள் தம்வசமுள்ளதாக ஈரான் அறிவிப்பு!

அல் - கொய்டா அமைப்பின் சில முன்னணி உறுப்பினர்கள், தமது நாட்டில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதை, முதற்தடவையாக ஈரானிய அரசு ஒத்துக்கொண்டுள்ளது.

ஈரானியப் புலனாய்வுத்துறை அமைச்சர் - அலி யூனிஸி தகவல் வெளியிடுகையில், அல் - கொய்டாவின் பெரிய மற்றும் சிறிய தரத்திலான உறுப்பினர்கள் தெஹ்ரானில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றார். எனினும், அவர்கள் பற்றிய விபரங்களை வெளியிட, அவர் மறுத்துவிட்டார்.

ஆனாலும், கைதானவர்களில் - அல் - கொய்டாவின் பேச்சாளர் சுலைமான் அபு கெய்த்தும் ஒருவராக இருக்கலாம் என நம்பப்படுகிறது. ஆப்கானில் தலிபான் ஆட்சி கவிழ்ந்த பின்னர், பல அல் - கொய்டா உறுப்பினர்கள் கைதானதாகவும், இவர்களில் சிலர் - பின்னர் தமது சொந்த நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும், ஈரானிய அமைச்சர் குறிப்பிட்டார்.

பின்லேடனின் புதல்வர் - சாட் பின்லேடன் மற்றும் அவரின் பாதுகாப்புத் தலைவர் போன்ற சிலரும் ஈராக்கினால் தடுத்துவைக்கப்பட்டவர்களில் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



அமைச்சர் அலி யூனிஸி

ஈரான், அல் - கொய்டாக்களின் தளமாக இருப்பதாக, அமெரிக்கா அண்மைக் காலமாகக் குற்றஞ் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## தனது முதல் படை நடவடிக்கையை ஆப்கான் இராணுவம் ஆரம்பித்தது





ஆப்கானிஸ்தானில் தற்போது அமைக்கப்பட்டுள்ள 70 ஆயிரம்பேர் கொண்ட தேசிய இராணுவம் - தனது முதல் படை நடவடிக்கையை, தலிபான்கள் அதிகமாக உள்ளதாகக் கருதப்படும் - சோர்மட் பள்ளத்தாக்கில் ஆரம்பித்துள்ளது.

சுமார் ஆயிரம் ஆப்கான் படையினர் - சில அமெரிக்க அதிகாரிகளின் உதவியுடன், 'வோறியர் சுவீப்' என்ற படை நடவடிக்கையை ஆரம்பித்துளளனர். ஆப்கான் தேசிய இராணுவத்தின் ஆறு பிரிவுகள் - இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. ஆப்கான் இராணுவம் - உள்நாட்டுப் பாதுகாப்பிற்கே பொறுப்பாகவிருக்கும் எனக் கூறப்பட்ட போதிலும், ஜெனரல் தொஸ்தம் தலைமையிலான தனிப்பட்ட இராணுவக் குழுவின் எதிர்ப்புக்கள், பெரும் சவாலாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆப்கான் இராணுவத்தின் சாதாரணச் சிப்பாய், 50 டொலரையே மாத ஊதியமாகப் பெறுவதால், ஆப்கான் இராணுவம்- பலமானதாக இருக்கும் என்பதை ஏற்கமுடியாது எனச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## லைபீரியத் தலைநகரில் குடிநீருக்கு தட்டுப்பாடு!



லைபீரியத் தலைநகர் மீது- கிளர்ச்சியாளர்கள் கடந்த ஒரு வாரகாலமாக நடத்தும் தாக்குதலால், அங்கு பெருமளவு மக்கள் நீரின்றி அவதியுறுகின்றனர். பிரதான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மீது- கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலால் அது செயலிழந்துள்ளது. இதனால், போதிய குடிநீர் இன்றிப் பெருமளவு மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

சுத்தமான, பாதுகாப்பான குடிநீர் கிடைக்காமையினால் - அங்கு கொலரா நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கப்படுகிறது. உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், மக்கள் நீண்ட வரிசையில் கடைகளின் முன்னாள் காத்துநிற்கின்றனர்.



ரோமில் நடைபெற்ற சர்வதேச அமெச்சூர் விளையாட்டுப் போட்டியில்- 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் சாதனைபடைத்த, அமெரிக்க வீரர் ஜோன் கெப்பலைப் படத்தில் காணலாம்.

## சொலமன் தீவில் இறங்கின அவுஸ்திரேலியப் படைகள்!



சொலமன் தீவில் அவுஸ்திரேலியப் பிரதமர்

பசுபிக் தீவான சொலமன் தீவில் நடைபெறும், இசைக் குழுக்களிடையேயான மோதல்களைத் தடுக்கும் நோக்கில் - அவுஸ்திரேலியா தலைமையிலான அமைதிப்படை, அத்தீவில் தரையிறங்க ஆரம்பித்துள்ளது.

முதல் முறையாக ஹேர்குலிஸ்-130 ரக சரக்குவிமானம் - அமைதிப் படையினரை ஏற்றிக் கொண்டு ஹொனியர் விமானத் தளத்தில் நேற்று அதிகாலை வந்திறங்கியது. மற்றுமோர் படைத்தொகுதி, ஆழம் குறைந்த கடலில் பயணிக்கக் கூடிய எச்.எம்.ஏ.எஸ். மனூரா என்ற போர்க் கப்பலில் வந்திறங்கியுள்ளது.

எதிர்வரும் நாட்களில் - சுமார் இரண்டாயிரம் படையினர் சொலமன் தீவில் தரையிறக்கப்படுவர். அவுஸ்திரேலியப் பொலிஸ்ப் படை நியூசிலாந்து, பிஜி, பப்புவா நியூகினி, ரொங்கோ ஆகிய நாடுகளின் இராணுவத்தினர் இதில் அடங்குவர். இரண்டாம் உலகப் போரின் பின்னர்- இப்பிராந்தியத்தில் மிகப் பெரும் இராணுவப் பிரசன்னமாக, இது இருககும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், சொலமன் தீவின் பிரபலமான கிளர்ச்சிக்குழுத் தலைவரான- ஹரல்ட் கெக்லோ எனது இலக்கு சுதந்திரமே என, அவுஸ்திரேலிய தொலைக்காட்சிக்கு, தனது தளத்திலிருந்து அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தொலைபேசி கட்டணங்கள் 15 வீதத்தால் அதிகரிக்கும்!

## செப்ரெம்பர் முதல் நடைமுறைக்கு

(கொழும்பு)

தொலைபேசிக் கட்டணம் - செப்ரெம்பர் மாதத்திலிருந்து பதினைந்து சதவீதத்தினால் அதிகரிக்கப்படும் என்று, ரெலிகொம் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

1997 ஆம் ஆண்டில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், ரெலிகொம் நிறுவனமும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு வருடமும் தொலைத்தொடர்புக் கட்டணத்தினை அதிகரிக்கமுடியும்.

ஆனால், கடந்த வருடம் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, தொலைபேசிக் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. எனினும், இந்த வருடம் - தொலைபேசிக் கட்டணம் பதினைந்து வீத்தால் அதிகரிக்கப்படும் என்று, ரெலிகாம் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால மேலும தெரிவித்தார். (01)

# தமிழை அரசகரும மொழியாக்க போதியளவு ஆளணி இல்லையாம்!

(கொழும்பு)

தமிழ் மொழியை அரசகரும மொழியாக அமுல்செய்வதற்குப் போதிய ஆளணி வளங்கள் இல்லை என, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ.பி.ஏ.சி.ஜெயவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற, மாவட்டச் செயலாளர்களுக்கு - அரசகரும மொழிக்கோவைகள் பற்றி விளக்கமளிக்கும் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போது, மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தமிழ்மொழி இன்னமும் அரசகரும மொழியாக அமுல்செய்யப்படவில்லை. தமிழ்மொழி தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுவருவதால், தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்துவதாகவும், செயலாளர் மேலும் தெரிவித்தார்.

அரசகரும மொழிக்கோவையை மீள வடிவமைப்பதற்கு - ஜனாதிபதி ஆரம்பித்த முயற்சியை, தற்போதைய அரசு முன்னெடுத்துச் செல்கிறது என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

## குப்பிவிளக்கு விபத்தில் குடும்பஸ்தர் காயம்

குப்பிவிளக்கு தவறுதலாகத் தீப்பிடித்ததில், எரிகாயமடைந்த குடும்பஸ்தர் - மந்திகை மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டார்.

இமையாணன் மேற்கில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் - மகாலிங்கம் சுந்தரலிங்கம் (வயது-45) என்பவருக்கு உடற்பகுதியில் பலத்த எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளன.

உறக்கத்திலிருந்தவேளை, அருகிலிருந்த குப்பிவிளக்கு கையினால் தட்டுப்பட்டபோது, ஏற்பட்ட தீயினாலேயே இவர் எரிகாயமடைந்தார் எனத் தெரியவருகிறது. (13)

## முஸ்லிம் காங்கிரஸ் ஏகபோகமானதல்ல!

முஸ்லிம்களின் ஏகபோக அரசனாக முடிசூடிக்கொள்ள நான் விரும்பவில்லையென, அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் ஏகபோகக் கட்சியாக, முஸ்லிம் காங்கிரஸ் இருக்க விரும்பவில்லை. வாக்காளர்களே எமது பலத்தைத் தீர்மானித்தவர்கள், என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கான பயணத்தடை; பிரான்ஸ் அரசாங்கம் நீக்கியது!

இலங்கைக்கான அநாவசிய பயணங்களைத் தவிர்க்குமாறு, முன்னர் விடுக்கப்பட்டிருந்த பயண ஆலோசனைகளை - பிரான்ஸ் அரசாங்கம் வாபஸ் பெற்றுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற போரைக் காரணம் காட்டி, பிரான்ஸ் அரசாங்கம் இந்த அறிவித்தலை முன்னர் விடுத்திருந்தது.

அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் சமாதான நடவடிக்கையை அடுத்து, தற்போது இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# பாக்கு நீரிணையில் பாலம் ஜெயலலிதா கடும் கண்டனம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைப்பதான இரு நாட்டரசுகளின் தீர்மானத்தை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடுமையாக எதிர்த்துள்ளார். இப்பாலம் மூலம் தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என, அவர் எச்சரித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு இவ்விடயத்தில் எந்த விட்டுக் கொடுப்பிற்கும் இடமளிக்கவேண்டாம் என, அவர் கடிதம் மூலம் இந்தியப் பிரதமரைக் கேட்டுள்ளார்.

## இலங்கை நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு

# போட்டிப் பரீட்சை நியமனங்கள் ரத்து; சிரேஷ்ட அடிப்படையிலேயே நியமனம்!

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவானவர்களை - சிரேஷ்ட அடிப்படையில் நியமிக்க, உயர்நீதிமன்றத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

நிர்வாகசேவை தரம் II இற்கு 164 பேர் தெரிவு செய்யப்பட்டிருக்கையில், வட - கிழக்குப் பகுதிகளுககெனத் தனியாகப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு - 117 பேருக்கு நியமனம் வழங்குவதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நியமனங்களை ரத்துச் செய்யவேண்டுமெனக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணையின்போதே, இந்த இணக்கம் காணப்பட்டு சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

நிர்வாக சேவையில் நியமனம் பெறுவதற்காக தெரிவுசெய்யப்பட்டுத் தாம் காத்திருக்கையில், தமக்குப் பின்னர் தெரிவானவர்களை நியமிப்பதற்கு எதிராக - 58 பேர் உயர்நீதிமன்றத்தில், இரண்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுமீதான விசாரணையின் போதே, வட-கிழக்கில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் தெரிவான 117 பேரின் நியமனங்களையும் ரத்துச்செய்த உயர்நீதிமன்றம், சிரேஷ்ட அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு இணக்கம் தெரிவித்தது.

(க,லி)

### இடைக்கால....

பிரதமரின் இந்தக் கடிதத்துக்குப் பின்னரே, இடைக்கால நிர்வாகத்தில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு, லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான குழுவொன்றை ஜனாதிபதி சந்திரிகா அமைத்ததாகவும் தெரியவருகிறது.

### தமிழரசை...

நோக்கமாகக் கொண்டே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தினைப் போன்று, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றுமொரு சம்பவத்தை ஏற்படுத்தி, சர்வதேச சமாதானப் படையைக் கொண்டுவர, முன்னர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என்றும், சோமவன்ச அமரசிங்க தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் கட்டுப்பாடுகளை மீறிவருவதாகத் தெரிவித்து, அமைதிப்படை ஒன்றை இங்கு வரவழைக்கும் சூழ்நிலைகளை ஏற்படுத்தும் முயற்சிகளில்- யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

### பாதுகாப்பு...

திற்குள் பயனற்றுப்போய் உள்ளன.

அந்த வளங்களை உரிய முறையில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பது, துரதிஷ்டவசமானது. அரசாங்கம்- தற்போது சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலமே, நாட்டின் அபிவிருத்தியைக் காண முடியும் என்றார்.

அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தன அங்கு உரையாற்றுகையில், சாவகச்சேரி, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்கள் அழிந்து, நாகசாகி போன்று காட்சியளிக்கின்றன. அவற்றைப் புனருத்தாரணம் செய்வதற்கே எமது அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது என்றார்.

### இந்தியாவின் ஆதரவின்றி...

னைக்கு பொருத்தமான தீர்வை காணமுடியாதிருப்பதுடன், புலிகளின் பிரிவினைக் கொள்கையையும் நீக்கமுடியாதிருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

எந்தத் தீர்வும் இந்தியாவின் ஆதரவின்றி அமுல் செய்யமுடியாது. சரியானதோர் தீர்வைக் காண்பதன் மூலம், அரசியல் ரீதியாக சாதகமான நிலை ஏற்படும் எனவும், அவர் அப்பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்திய அரசியலமைப்பு நிபுணர்கள் இருவர், இன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் - "இந்திய சமஷ்டி" அமைப்புத் தொடர்பாக உரை நிகழ்த்தவுள்ளனர்.

இந்திய மக்களவையின் முன்னாள் செயலாளர் - கலாநிதி சுபாஷ் காஷியப் மற்றும் இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கிர்வால் ஆகியோரே, இந்திய சமஷ்டி பற்றி உரை நிகழ்த்தவுள்ளனர்.

புதுடெல்கி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகமும், சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையமும் இணைந்து - 'இந்தியாவின் வரலாற்று ரீதியான சமஷ்டி' என்ற இந்தக் கருத்தரங்கை நடத்தவுள்ளன.

மாநிலங்களுக்கிடையிலான அதிகாரப் பரவலாக்கம், நிதிக்கட்டமைப்பு, நீதியமைப்பு, சமஷ்டி அரசியல் யாப்பு, தேசிய ஒருங்கிணைப்பு ஆகிய விடயங்கள் பற்றி, இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

### இத்தாலிக்கு...

கடவுச்சீட்டுக்கள் இருக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களுள்- 75 இந்தியர்களும், 59 பாகிஸ்தானியர்களும், 29 பங்களாதேஷ் நாட்டவர்களும் அடங்குவர்.

கல்கிசை பொலிஸ் பிரிவில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே இந்த வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

### குரங்குப்பாஞ்சான் முகாமை...

அறிவிக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டது. கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் விடுதலைப் புலிகளின் குழுவினர், இந்த முகாமைப் பார்வையிட்ட பின்னர்- முகாமினை அகற்ற முடியாதென அவர்கள் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்துள்ளதாக - கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர்டோட் ரயர் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வன் சார்பாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர் பவான், இது தொடர்பாகத் தமக்கு அறிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். எனினும்- விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவின் தீர்மானங்களுக்கு இணங்காதது குறித்து ஆராய்வதற்காக, மீண்டும் ஒரு தடவை கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன், தமிழ்ச்செல்வனை சந்திப்பதற்கு முயற்சி செய்திருந்தார்.

எனினும், இந்த சந்திப்பிற்கு நேரம் ஒதுக்கமுடியாமை காரணமாக இந்த சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதாகக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### இடைக்கால நிர்வாகப்...

நோர்வே திருத்தங்களைச் செய்தாலும் அரசாங்கமும் அதனை பரிசீலித்தது. முன்னர் தயாரிக்கப்பட்ட யோசனைகளுக்கும், பின்னர் தயாரிக்கப்பட்ட யோசனைகளுக்கும் இடையே வேறுபாடுகள் இருந்தன. எவ்வாறாயினும்- விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட, திட்ட யோசனை அரசாங்கத்தின் இறுதித் தீர்மானத்திற்கு உட்பட்டது.

விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகம் தொடர்பான, தமது யோசனைகளைத் தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றார்கள். விரைவில் சாதகமான பதில் ஒன்று கிடைக்கும் என, நம்புகிறோம் எனத் தெரிவித்த அமைச்சர்,

விரைவில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறினார்.

அப்படியானால், இடைக்கால திட்ட யோசனையை நோர்வே அரசாங்கம் தயாரித்ததா என செய்தியாளர் ஒருவர் கேட்டபோது, அதனை மறுத்த அமைச்சர் பீரிஸ், நோர்வே அரசாங்கத்திற்கு பங்கு இருக்கின்றது என்பதை மட்டும் ஒப்புக் கொண்டார். (200)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.91 | 97.31 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.86 | 154.34 |
| 1 யூரோ | 108.95 | 110.28 |
| 1 சுவிஸ் பிராங் | 71.82 | 72.13 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.28 | 63.52 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.90 | 25.90 |

A/L DAY CLASS
BIOLOGY
"உயிர் பல்வகைமை மீட்டல் வினாவிடை"
BY : நாகநாதன்
PHYSICS
திரு. ஜெயசீலன்
திரு. பிரபா
MATHS
திரு. ராஜன்
CHEMISTRY
"அசேதன இரசாயன வினாவிடை"
BY : அன்பழகன்
பாட அலகுகள் கற்க விரும்புபவர்களுக்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்
NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி,
யாழ்நகர்

பயிற்சிப் பத்திரிகையாளர் தேவை

பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

குறிப்பிட்ட காலம் பத்திரிகைத்துறையில் செய்முறைப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சி முடிவில் பத்திரிகைத்துறையில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

எதிர்வரும் 29.07.03 அன்று காலை 11.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.